முரசொலி

வார இதழ் · மு. கருணாநிதி

முரசு 3 | 9—11—56 வெள்ளி | ஒலி 31

செந்தமிழ் பதிப்பகம்.
வேலூர். சேலம்

ருச்சியில் கனம் காமராசர்; சுப்ரமணியம்; பக்தவத்சலம்—ஆகியோர் தி. மு. க. வை இழித்தும் பழித்தும் பேசினர்—(செய்தி.)

எகிப்து விவகாரம்-1

பொழுதுபோக்கு

'டெமாஸ்தனிஸ்'

1896-ம் ஆண்டு, நாடக ஆசிரியர் ஜியார்ஜ் பெர்னார்ட் ஷா எழுதிய நாடகமொன்றில் பிரிட்டிஷ் மக்களின் குணநலன்களை வெகு அழகாக சித்தரிக்கின்றார். அன்று அவர் கூறியவைகளை, எகிப்து நாட்டில் பிரிட்டிஷ்காரர்களின் ஆக்ரமிப்போடும், அதற்கு அவர்கள் உலக நாடுகளுக்குக் கூறும் சமாதானத்தோடும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, ஷா எவ்வளவு தீர்க்க தரிசனத்தோடும், விளக்கத்தோடும், பிரிட்டிஷ் மக்களின் பண்புகளை வெளியிட்டிருக்கிறார் என்பது தெரியும். பிரிட்டிஷ் மக்களைப் பற்றி ஷா கூறுகிறார்:

"ஆங்கிலேயன் ஒரு பொருளை விரும்பினால் அதை அவன் விரும்புவதாகவே சொல்லிக் கொள்வது கிடையாது. காலம் வரும் வரையில் பொறுமையாகக் காத்திருக்கிறான். சாதகமான நிலை ஏற்பட்டவுடன் அந்தப் பொருளை அடைவதை அவனுடைய ஆத்மீகக் கடமையாகவும், மதக்கடமையாகவும் கருதுகிறான் — உடனே அப்பொருளுக்குச் சொந்தக்காரர்களை வெற்றி கொள்ளப் புறப்படுகிறான். பெருங்குடி மக்களின் தான்தோன்றித் தனமும், வியாபாரியின் பிடிவாதப் பண்பும் அவனிடம் நிரம்ப உள்ளன. அவன் செய்கின்ற எந்தக் காரியத்திற்கும் ஒரு நியாய அடிப்படையை அவனாகவே கற்பித்துக் கொள்ளுவான். விடுதலையின் காவலனாகவும் தன்னைக் கூறிக்கொண்டு, உலகின் பாதியைக் கபளீகரம் செய்துவிட்டு, அதை வெறும் 'குடியேற்ற முறை' என்று செல்லப் பெயரிட்டு அழைத்துக் கொள்கிறான். அவனுடைய கலப்படமான் செஸ்டர் பொருட்களுக்கு மார்க்கெட் தேவைப் பட்டால் சுதேசிகளுக்குக் கிறிஸ்துவ மதத்தின் அமைதியைப் போதிக்க ஒரு பாதிரியை அனுப்பி வைக்கிறான். அந்தப் பாதிரியை சுதேசிகள் கொன்று விடுகின்றார்கள். உடனே, கிறிஸ்துவ மதத்திற்கு விளைந்து விட்ட ஆபத்தைத் தடுக்க போர்க் கோலம் பூண்டு விடுகிறான்.

கிறிஸ்துவ மதத்துக்காகப் போராடி, சுதேசிகளை வென்று, அவர்களுடைய நாட்டை ஆண்டவன் அளித்த மார்க்கெட்டாக ஏற்றுக் கொள்ளுகிறான்! தன்னுடைய நாட்டின் கரைகளைப் பாதுகாப்பதற்காக உலகக் கடல் எங்கும் ஆங்கிலக் கப்பல்களை அனுப்புகிறான். எதிர்க்கும் கப்பல்களை மூழ்கடிக்கிறான்; எரித்துச் சாம்பலாக்குகிறான். ஒரு அடிமை இங்கிலாந்தில் காலடி எடுத்து வைத்தவுடனே, சுதந்திர மனிதனாகி விடுவதாகப் பறைசாற்றுகிறான். ஆனால் ஆறு வயது ஏழைக்குழந்தைகளைப் பதினாறு மணி நேரம் ஆலைகளில் வேலை வாங்குகிறான். (ஆனால் இப்பொழுது இந்நிலை இல்லை) ஆங்கிலேயன் செய்கின்ற காரியங்களைப்போல் நல்லதும் கிடையாது; தீயதும் கிடையாது! ஆனால் அவன் தவறு செய்வது என்பதே கிடையாது! அவன் ஒவ்வொரு காரியத்தையும் ஒரு கொள்கையின் அடிப்படையிலே செய்கிறான். நாட்டுப்பற்றின் அடிப்படையில் போர்தொடுக்கிறான்; வியாபாரக் கொள்கையின் அடிப்படையில் கொள்ளையடிக்கிறான்; அரசாங்கக் கொள்கையின் அடிப்படையில் மக்களை அடிமைப் படுத்துகிறான்; ஆண்மைத் தனத்தின் அடிப்படையில் பிறரைத் துன்புறுத்துகிறான்; இராஜ விசுவாசக் கொள்கையின் அடிப்படையில் அரசனை ஆதரிக்கிறான்; குடியரசுக் கொள்கையின் அடிப்படையில் அரசனின் தலையை வெட்டி எறிகிறான். இம்மாதிரியான எந்தச் செயலுக்கும் அவன் உபயோகிக்கும் தாரக மந்திரம்—''கடமை''!—"

—ஷாவின் இந்தப் படப்பிடிப்பு, பிரிட்டிஷ்காரர்களின் எகிப்து ஆக்ரமிப்பின் பின்னணியில் வைத்துப் பார்ப்போருக்கு நன்கு விளங்கும்.

நாசரின் கையிலிருந்து சூயஸ் கால்வாயை—அதன் நிர்வாகத்தைத் தட்டிப் பறிக்க, இஸ்ரேலைத் தூண்டிவிட்டுப் படையெடுக்கச் சொல்லி, ஆங்கிலோ—பிரஞ்சு ஏகாதிபத்ய வெறியர்கள் 'போலீஸ் நடவடிக்கை' என்று கூறி, எகிப்தின்மீது தாக்குதல் நடத்தியிருப்பதற்கு—இந்த நேர்மையற்ற போக்கிற்கு — வரலாற்றில் ஈடு இணையே கிடையாது!

சுண்டைக்காய் இஸ்ரேலுக்கு ஆங்கிலோ — பிரஞ்சு ஆதரவில்லாமல் பாதுகாப்பு சபையின் தாக்கீதையும் மீறிப் படையெடுக்கும் துணிவு எங்கிருந்து பிறந்தது?

ஐ. நா.வில் பாதுகாப்பு சபையில் ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தும் அந்தஸ்து பெற்ற ஐந்து நாடுகளில் ஒன்றான பிரிட்டனும், அதே அதிகாரமுடைய அதன் சகாவான பிரான்சும் ஐ. நா. வின் அங்கீகாரம் பெறாமல் 'போலீஸ் நடவடிக்கை' எடுத்தது ஐ. நா.வை அலட்சியப்படுத்தும்—அவமானப்படுத்தும்—செயலல்லாமல் வேறென்ன?

சாதகமான விஷயங்களுக்கு மட்டில் ஐ. நா. வின் துணை நாடுவதும், பாதகமான விஷயங்களில் அதைப் புறக்கணித்து நடப்பதும் தான் பிரிட்டிஷ் ராஜதந்திரமானால், உரிமை வேட்கையால் கிளர்ந்தெழுந்து விட்ட ஆசிய மக்கள் அதைப் பார்த்து சும்மா இருக்க மாட்டார்கள்!

இவர்கள்தான், முன்பு பர்ல் துறைமுகத்தில் ஜப்பான் குண்டு வீச்சு நடத்தியபோது ஜப்பானியர்களை பாசிச வெறியர்கள் என்று வர்ணித்தவர்கள்!

இவர்கள்தான், போலந்துக்கும் ஆஸ்திரியாவிற்கும் இட்லர் விட்ட இறுதி எச்சரிக்கையை நையாண்டி செய்து, துரோகம், முதுகுப்புற தாக்குதல்—என்றெல்லாம் தூற்றியவர்கள்!

ஒரு சமயம் ஒரு பிரிட்டிஷ் பிரதம மந்திரி நண்பரிடம் சொன்னாராம்:

"பிரிட்டனுக்கு நிரந்தரமான நண்பர்களோ, நிரந்தரமான விரோதிகளோ கிடையாது. நிரந்தரமான நலன்கள் மட்டுமே உண்டு" என்று!

அமெரிக்கரையே கலந்தாலோசிக்காமல், பிரிட்டன் நடிவடிக்கை எடுத்திருப்பது உண்மையானால் அது மேற்கூறிய வாசகத்தை மெய்ப்பிப்பதாகத்தான் கொள்ள வேண்டும்.

இஸ்ரேல் எகிப்தியப் பிரதேசமான சினாய் பாலைவனத்தில் பிரவேசித்தபின் பிரிட்டனும் பிரான்சும், 'இஸ்ரேல் படைகளும் எகிப்துப் படைகளும் சூயஸ் கால்வாய் பிரதேசத்திற்கு பத்து மைல்களுக்கு அப்பால் வாபசாகிவிடவேண்டும்' என்று இறுதி எச்சரிக்கை விட்டன!

இதன் பொருள் என்ன? இஸ்ரேல் படைகள் சினாய் பாலைவனத்தில் சூயஸ் கால்வாய்க்குப் பதினைந்து மைல்களுக்கு அப்பால் இருப்பதால், இந்த இறுதி எச்சரிக்கை இஸ்ரேலைப் பாதிக்க நியாயமில்லை. ஆகவே அதன் உட்பொருள் சூயஸ் பிராந்தியத்திலிருந்து எகிப்துப் படைகள் வெளியேற வேண்டும் என்பதுதான். சூயஸ் கால்வாயை ஆக்ரமிக்க, பிரிட்டனும் பிரான்சும் இஸ்ரேலைக் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டன — அவ்வளவுதான்!

கம்யூனிஸ்ட் ரஷ்யா, சிவப்புச் சீனா, மார்ஷல் டிட்டோ, நேரு, ஏன் பிரிட்டனின் பிரதம சகா அமெரிக்கா—உலக அபிப்பிராயமே பிரிட்டிஷ்—பிரஞ்சு நடத்தையை வன்மையாகக் கண்டித்திருக்கிறது!

ஐ. நா. வின் பொதுச் சபை அவசரக் கூட்டம்கூடி, அறு

✻ தொடர்ச்சி 10-ம் பக்கம்

நவம்பர் 11:

தமிழக அமைப்பு நாள் விழா

அகத்தீஸ்வரம், தேவாளை, விளவங்கோடு, கல்குளம் ஆகிய நாஞ்சில் பகுதியைச் சேர்ந்த நான்கு வட்டங்களும், செங்கோட்டை வட்டத்தில் ஒரு பகுதியும், நவம்பர் முதல் நாளிலிருந்து தமிழ் மாநிலத்துடன் இணைந்துள்ளதை வரவேற்று மகிழவும், செங்கோட்டை வட்டத்தின் பிற பகுதியையும் தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சின்—சித்தூர், பாலக்காடு ஆகிய வட்டங்களிலுள்ள தமிழ்ப் பகுதிகளையும், ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளையும், தமிழ் மாநிலத்தோடு இணைக்கும்படி மத்திய—மாநில அரசியலாரை வற்புறுத்தவும், நவம்பர் திங்கள் 11-ம் நாள் ஞாயிற்றுக்கிழமையை தமிழக அமைப்பு நாள் விழாவாகக் கொண்டாடும்படி நாடெங்கிலுமுள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளையும், ஆதரவாளர்களையும், பொதுமக்களையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

நவம்பர் 2-ம் நாளன்று நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் சார்பில் நாகர்கோயிலில் நடைபெற்ற இணைப்பு விழாவில் நான் கலந்து கொண்டு நம் கழகச் சார்பிலும், தமிழ் மக்கள் சார்பிலும் வரவேற்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துவிட்டு வந்துள்ளேன்.

அன்பன்,

இரா. நெடுஞ்செழியன்

பொதுச் செயலாளர், தி. மு. கழகம்

சென்னை 9-11--56 வெள்ளி

உறுமுகிருர்கள்!

தென்னகத்தைக் கப்பியிருக்கும் இருளகற்ற ஒளிக் கதிர் வீசி புறப்பட்டிருக்கும் உதய சூரியன் கண்டு இப்போதிருந்தே உறும ஆரம் பித்து விட்டாரகள் ஊராள வந்தவக்சள்!

அவர்களது நேர்மையற்ற வசைமாரியைக் கேட்கச் சகிக்காத பொதுமக்களது மனப்போக்கு காரணமாக திருச்சிப் பொதுக்கூட்டத்தில் சிறு சலசலப்பும் ஏற்பட்டதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

இதைச் சாக்கு வைத்து ஆரிய—பனியா ஏடுகள் அந்தக் குழப்பங் களுக்கெல்லாம் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்தான் எனறும் சுட்டிக் காட்டிடத் துவங்கி யிருக்கின்றன.

ஆனல் திருச்சி நகரத் தோழர்களை விசாரித்து அமைச்சர்கள் பேசிய கூட்டத்தில் நேர்ந்த அமைதியின்மைக்கும் கழகத்திற்கும் சிறிதும் தொடர்பு கிடையாது—எனத் தெள்ளத் தெளிய அறிக்கை விடுத்திருக் கிறது 'தலைமைக் கழகம்.'

பொதுக்கூட்டத்தில் கலாம் விளைப்பதும்; முதுகுப் புறத்தாக்கு தல் நடத்துவதும் கொள்கைக்குக் கொள்கை தாக்குதல் நடத்திப் பார்ப் பதற்கு நடுங்கும் கோழையர் கூடாரத்துப் பண்பு கெட்ட செய்கை.

தி. மு. கழகத்தில் அப்படி ஏதும் வலுவற்ற கொள்கைகளும் இல்லை; அதில் ஜனநாயகக் கோட்பாடு தெரியாத நாகரிகப் பதம் கெட்டவர்களும் கிடையாது.

அப்படி அங்கே தி. மு. க. வின்மீது 'தாக்குதல்' நடத்தியவர்கள் யார் யார்? சொற் போர்களத்தில் இவருக்கு இணையும் இல்லை; இரண் டாவதும் கிடையாது—என்ற புகழ் மொழிக்குப் பாத்திரராகக்கூடிய இரணகள சூரர்களா?

இல்லை.

முதலாவது காமராசர்! அவர் இப்போதுதான்—அதுவும் நம்மைத் திட்டித்தான் பேசுவதற்கே பயிற்சி பெற்று வருகிருர்.

அடுத்து சுப்ரமணியம்! அவருடைய குருநாதர் ஆச்சாரியாரது வாய்க்கே நாம் பூட்டுமாட்டி யிருக்கிறோம்; இவர் எம்மாத்திரம்!

மூன்றுவது பக்தவத்சலம்! பாவம்; அவர் தன் வாழ்நாளிலேயே முதன் முறையாக அன்றுதான் பொதுமக்கள் கூட்டத்தைப் பார்த்திருக் கிருர் போலிருக்கிறது. இல்லையேல் அவ்வளவு பேசியிருக்கமாட்டாரே!

—இவர்களது சலசலப்புக்கெல்லாமா நாம் பயந்து நடுங்கிவிடப் போகிறோம்! அல்லது இவர்களது ஆதாரமற்ற தூஷணையை நம்பித் தான் ஏமாந்து விடப் போகிருர்களா மக்கள்?

அப்படித்தான் பிரமாதமான தாக்குதலை நடத்தி யிருக்கிருர்களா, இந்த அமைச்சர்கள்?

எல்லாம் வழக்கமான பல்லவிதான்;

"வடநாடு தென்னாட்டை அடிமைப்படுத்தி யிருக்கிறது—ஆதிக்கம் செலுத்துகிறது என்பதெல்லாம் அபத்தம்; வெள்ளைக்காரர் வெளி யேறியதுமே எல்லா ஆதிக்கமும் அகன்று விட்டது—ஒழிந்து விட்டது;"

—இது காமராசரது வாசகங்கள்;

தென்னாட்டில் வடநாட்டு ஆதிக்கம் கிஞ்சிற்றும் கிடையாதாம்!

அது எங்ஙனம் கிடையாதெனபதை விளக்காமல் 'அபத்தம்' என்கிற ஒரே வார்த்தை மூலம் மெழுகி மறைக்கப் பார்த்திருக்கிருர், காமராசர்!

'அபத்தம'—இவர் போன்ற ஊமைகள் தனக்குப் பிடிக்காதவை களைச் சுட்டிக்காட்ட உபயோகிக்கும் ஒரே ஒரு வார்த்தை இது!

அபத்தம்—என்ற அந்த வார்த்தை உதிர்ந்தால்; ஏதோ அதைப் பற்றி அவர்களால் விவரிக்க முடியவில்லை எனறுதான் பொதுமக்கள் பொருள் கொள்ளவேண்டும்!

வட நாட்டவர் ஆதிக்கம் தென்னகத்தில் கிடையாது என்கிருர் காமராசர்!

—இவரது வாசகங்களை மீண்டும் மீண்டும் புள்ளிவிபரங்களைக் காட்டி நாம் மறுத்து, அதைத்தான் புரிந்துகொள்ள வேண்டும் என்கிற நிலையிலில்லை பொதுமக்கள், இப்போது!

அமைச்சர்களுக்குள்ளாகவே தேடிப்பார்த்தால் போதும்; பதில் கிடைத்துவிடும்!

உதாரணமாக, வளமான காட்டுப் பிரதேசங்கள் சில செங் கோட்டையுடன் சேர்க்கப்படாமல் விடப்பட்டதற்குக் காரணம் சென்னை அரசினரின் அசிரத்தை என்று கூறினர், முன்னாள் காங் கிரஸ் காரியதரிசி கரையாளர், செங்கோட்டைப் பொதுக்கூட்ட மொன்றில்!

அதற்குப் பதில் சொல்லுமுகத்தான் பேசிய சுப்ரமணியனர் என்ன பதில சொன்னுர் தெரியுமா?

"செங்கோட்டைப் பிரிவினையில் சென்னை அரசாங்கம் அசிரத்தையா யிருந்ததாக கரையாளர் எழுப்பியுள்ள குற்றச் சாட்டினை மறுக்கிறேன்.

"இது குறித்து மத்திய அரசாங்கத்திடம் எடுத்துக் கூற நான பலமுறை டில்லி சென்றேன. ஆனல் இதில் தோல்வியுற்றேன்."

—சுப்ரமணியனின் பதில் இது!

செங்கோட்டையைச் சுற்றியுள்ள செழிப்பான பகுதிகள் தமிழகத் துக்குத்தான் சொந்தம் என்பதை எடுத்துக்கூற பல முறை டெல்லி சென்ருராம்!

அவ்வாறு சென்ற போதெல்லாம் தோல்வி கண்டாராம்!

"நான் என்ன செய்வேன்? கீரைக்கறி சமைக்கச் சொல்லி நான் பல முறை சொன்னேன் என் மனைவியிடம்! அவள் கேட்கவில்லையே; நான் என்ன செய்யட்டும்?"—இப்படி நாலுபேர் முன்னிலையில் கூறு வதற்கு வெட்கப்படுவான், ஒருதன்மானமுள்ள ஆண்மகன்! நாலு பேர் காறி உமிழ்வார்களே என்று அஞ்சி நடுங்குவான்!

ஆனல் தமிழகத்தின் உரிமையான பகுதிகளைக் கேட்கும்போது அதை வட நாட்டு மத்திய அரசு தரவில்லை; தோல்வி கண்டேன்; நான என்ன செய்யட்டும்—என்று துணிவுடன் பேசியிருக்கிருர், சுப்பிரமணி யனர்!

உரியதைக் கொடுக்கவில்லை வடநாட்டு அரசு!

தானகவே நியாய முணர்ந்து கொடுக்காதது மட்டுமல்ல; ஒரு மாநிலத்தின பொறுப்புள்ள பதவி வகிக்கும் நிதியமைச்சர் ஒருவர் பன் முறை டெல்லி சென்று வற்புறுத்திக் கேட்டும் கொடுக்கமறுத்திருக்கிறது.

இதற்கு என்ன பொருள்?

வடநாட்டு அரசு ஆதிக்கம் செலுத்துகிறது அரசியல் துறையிலே என்பதைத் தவிர இதற்கு வேறு என்ன அர்த்தம் இருக்க முடியும்?

மேலும் காமராசர் பேசியிருக்கிருர்:

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில ரூ. 2500 கோடி வேண்டுமென இவர்கள் தி. மு. க.) கேட்கின்றனர்......... இந்தத் தொகையைச் செலவிட என்ன உருப்படியான திட்டம் இவர்களிடம் இருக் கிறது?'

—இப்படிக்கூறி சற்று நிறுத்திவிட்டு, காமராசர், மக்கள் கூட்டத்தி லிருந்து ஒரு கைதட்டலை எதிர்பார்த்திருந்தாலும் நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை!

பாவம்; ரூ. 2500 கோடி அளவிற்கு ரூபாய்களைச் செலவிட்டால் தான் திட்டமென்று நினைத்துக் கொண்டிருக்கிருர் போலிருக்கிறது, பரிதாபத்திற்குரிய காமராசா!

அய்யா, காமராசரே! உமது அறியாமைக்காக எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

கோடிக் கணக்கில் ரூபாய்களைச் செலவிடாமலும் திட்டம் தயா ரிக்கலாம்.

உதாரணமாக தெலுங்கு, மலையாளச், கன்னடப் பகுதிகளைக் கொடுத்துவிட்டு எஞ்சியிருக்கும் பகுதிக்கு சென்னை என்று இருக்கும் பெயரை தமிழகம் அல்லது தமிழ்நாடு என்று பெயர் வைக்கக் கோறினேமே, இந்த நாட்டு எதிர்க்கட்சிகள் அனைத்தோடும் கூட்டணி அமைத்துக்கொண்டு; அதற்குப் பெயர் என்னவாம்? அதுவும் ஒரு திட்டம்தான் காமராசரே; அதுவும் ஒரு திட்டம்தான்!

"உருப்படியான திட்டம் தந்தால் நான் உடனே பதவியிலிருந்து விலகி விடுகிறேன!"

—சவால் விட்டிருக்கிருர், இந்த விருது நகரத்து வீரர்!

திட்டமில்லையாம் நம்மிடம்! ஏன் இல்லை நல்ல திட்டம்?

இதோ இருக்கிறது காமராசரே திட்டம்!—சென்னைக்குத் தமிழகம் அல்லது தமிழ் நாடு என்று பெயர்வைக்கும் திட்டம்! இது உருப்படியானது அல்ல என்று எந்தத் தன்மானமுள்ள தமிழனும் உணமை உணர்வுடன் கூறமாட்டான்.

ஏன் காமராசரே இன்னும் நீர் பதவியை விட்டுப் போகவில்லை? ஏன்?

—காமராசரே! இதற்குத் தக்க பதில் சொல்லுவீர்; இல்லையேல் இனியேனும் பிதற்ருமல் இருந்து உங்கள் பதவியைப் பணயம் வைக் காமலாவது புத்திசாலித்தனமாக இருப்பீர் என எச்சரிக்கிறோம்!

எகிப்து விவகாரம் (2)

அவர்களது அந்தரங்கம்!

ஆண்டனி இட்லர்

ஆமாம்; என் பெயர் ஆண்டனி ஈடன் அல்ல—நான் செய்த கொலை பாதகச் செயல்களுக்குப் பிறகு என்னை ஆண்டனி இட்லர் என்று அழைப்பதுதான் இட்லரை இழிவு படுத்துவது போலாகும்!

'என்னடா உண்மையை இப்படிச் சொல்கிறானே' என்று ஆச்சரியப்படுகிறீர்களா? பயப்படாதீர்கள். என் மனசாட்சியோடுதானே சப்தம் போட்டுப் பேசிக் கொண்டிருக்கிறேன்! அது யாருக்குக் கேட்கப் போகிறது!

சமீபத்திலே உங்கள் நாட்டிலே ஜமீன் ஒழிப்பு; இனும் ஒழிப்பு வந்ததல்லவா? அதைப் போலவே இந்த நூற்றாண்டில் ஏகாதிபத்திய ஒழிப்பும் வந்து விட்டது. ஆனால் உங்கள் நாட்டு ஜமீன்தார்கள் இனி தாங்கள் ஒன்றும் செய்ய முடியாது என்பதை உணர்ந்து பேசாமலிருந்து விட்டார்கள். ஆனால் நாங்கள் — நாங்கள் என்றால் இங்கே கன்சர்வேடிவ் கட்சி என்று அர்த்தம்—சும்மா யிருப்போமா?

உதாரணம் சொல்ல வேண்டுமானால் இந்தியாவிலே சமஸ்தான ஒழிப்பு ஏற்பட்டபோது என்ன நடந்தது? ஹைதராபாத் நிஜாம் ஒரு சிற்றெறும்பு போல! அந்த எறும்புக்குத்தான் எவ்வளவு ஆணவம்? தான் தோற்பது நிஜம் என்பது தெரிந்தும் சிறிது நேரம் துள்ளிப் பார்க்க வில்லையா? அழிந்து விடுவோம் என்பது தெரிந்தும் ஆர்ப்பாட்டம்—

சரிந்து சாம்பலாகி விடுவோம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாய்த் தெரிந்தும் கடைசி நேரத்திலே ஒரு முரட்டுத் துள்ளல்—

இதைத்தான் ஏகாதிபத்திய வெறி என்பார்கள்!

மரியாதை ராமன் கதை தெரியுமா? அவனிடத்திலே வழக்கு ஒன்று விசாரணைக்கு வந்ததாம்.

இரு குழந்தைகள்! அவைகளுக்கு இரு பெண்கள், தான் தான் அதைப் பெற்றெடுத்த தாயார்—என்று உரிமை கொண்டாடினார்கள்!

ஒரு குழந்தைக்கு இரு தாய்கள் எப்படி இருக்க முடியும்? மரியாதை ராமன் யோசித்தான்! உடனே அவன் இதயத்தில் ஒரு யோசனை உருவாயிற்று.

உடனே இரு தாய்மார்களையும் அழைத்தான்.

'அன்புள்ள தாய்மார்களே! குழந்தைக்கு நீங்கள் இருவருமே அன்னைமுறை கொண்டாடுகிறீர்கள். எனவே இந்தக் குழந்தையை இருதுண்டுகளாக வெட்டி ஆளுக்கொரு துண்டு எடுத்துக்கொண்டு, சமாதானமாக வீடு போய்ச் சேருங்கள்!' —என்றான், அவன்!

அதில் ஒருத்திக்கு இந்தத் தீர்ப்பைக் காதுகொடுத்துக் கேட்க முடியவில்லை.

'அய்யா நீதிபதி அவர்களே! வேண்டாம் இந்தக் கொலைகாரத் தீர்ப்பு! நியாயம் என்ற பெயரில் அநியாயமாக இந்தக் குழந்தையைக் கூறு போட்டு விடாதீர்கள்! என் குழந்தை எங்கிருந்தாலும் சௌக்கியமாக இருந்தால் அதுவே எனக்குப் போதும். தயவுசெய்து குழந்தையைத் துண்டாடாமல் அவளுக்கே கொடுத்துவிடுங்கள்!'

—அந்தப் பேதையின் அழுகுரலைக் கேட்டான் மரியாதை ராமன்!

அடுத்தவளோ 'உடனே அந்தக் குழந்தையைப் பிளந்து எனக்கு ஒரு பாதியைக் கொடுங்கள்' என்று கூப்பாடு போட்டாள்.

பத்து மாதம் சுமந்து பெற்ற எந்தத் தாய்தான் மனது வந்து தனது குழந்தையைக் கத்தி முனையால் சரிபாதியாகப் பங்குபோட ஒப்புவாள்?

மரியாதை ராமனுக்கு உண்மை புரிந்துவிட்டது. உண்மைத் தாய் யாரென்பதைக் கண்டு கொண்டான். குழந்தையைக் கூறு போட வேண்டாம். என்றவளிடம் குழந்தையைத் தூக்கிக் கொடுத்து விட்டான்!

அந்த 'இன்னொருத்தி'க்குத்தான் எவ்வளவு கெட்ட எண்ணம் பார்த்தீர்களா?

அடுத்தவள் குழந்தை தனக்குக் கிடைக்கா விட்டால், அந்தக் குழந்தையையே கூறுபோட வேண்டுமென்று நினைக்கிறாள்!



ஆண்டனி இட்லர் ; முசோலினி மோலட்—நாங்கள்தான் !

அதுபோன்ற நினைப்பு அவளுக்கு மட்டுமல்ல; உலகத்தில் அன்று முதல் இன்றுவரை வாழ்ந்து வரும் எல்லா ஏகாதிபத்தியங்களுக்கும் சொந்தமானதாகும்!

அது போன்றதொரு ஏகாதிபத்திய நினைப்பால் உந்தப்பட்டுதான் நாங்கள் எகிப்து மீது சீறிப் பாய்ந்தோம்!

அமெரிக்காவிற்கு ஒரு சியாங்கே ஷேக்!

எங்களுக்கு ஒரு 'இஸ்ரேல் நாடு!'

இஸ்ரேல் — எங்கள் காலடியை நக்கிக் கொண்டிருக்கும் அடிமை! எங்கள் எதிரிகள் மீது 'சூ' என்று ஏவி விடுவதற்காகவே நாங்கள் அந்த நாயை வளர்க்கிறோம். அதைத்தான் இப்போது சூயஸ் பிராந்தியத்தின்மீது ஏவிவிட்டோம்!

நாய் நுழைந்ததும் பிறகு எஜமானனும் நுழைய வேண்டியதுதானே! அதனால்தான் நானும்—எனது நண்பர் பிரெஞ்சு பிரதமர் மோலட்டும் —இனிமேல் அவரை முசோலினி மோலட்—என்றே அழையுங்கள் — எகிப்துப் பிராந்தியத்தில் படைகளுடன் நுழைந்தோம்!

இதே போலவே சிலநாட்களுக்கு முன்பு ஹங்கேரியிலே ரஷ்யப் படைகள் நுழைந்ததே, அது நினைவிருக்கிறதா? அப்போது அவசர அவசரமாக ஐ.நா.வைக் கூட்டினோம்! அந்த நேரம் என்னுடைய பிரதிநிதி எரிமலை நெருப்புக்குழம்பைக் கக்குவதைப் போல் அன்னிய நாடு ஒன்றில்படைகளை அனுப்பியதற்காக ரஷ்யா மீது கண்டனக் கணைகளைப் பூட்டினார்.

"ஹங்கேரியிலே வெளிநாட்டுத் துருப்புகள் அதிகமான அளவில் பலவந்தமாக நுழைந்திருக்கின்றன என்கிற உண்மையை யாரும் மறைக்க முடியாது. இது போன்ற செயல் ஐ.நா. ஸ்தாபனம் எந்த அஸ்திவாரத்தில் எழுப்பப் பட்டிருக்கிறதோ அதையே குலைப்பதாகும். ஹங்கேரி மக்கள் தங்களது சுதந்திரப் போராட்டத்திற்காகத் தாங்கும் துன்பங்களை கவனிக்கும்போது நமது இதயம் செந்நீர் வடிக்கிறது!

—சர். பியர்சன் டிக்சன் என்னும் பெயர்படைத்த பிரிட்டனின் பிரதிநிதி சென்ற 28-ம் தேதி இரவு ஐ. நா. வில் பேசியிருக்கிறார் இப்படி!

ஹங்கேரியிலே ரஷ்யப்படைகள் நுழைந்தது பற்றி பிரிட்டனின் கண்கள் கண்ணீர் பொழிய வில்லையாம்! அவர்களது இருதயமே செந்நீர் வடிக்கிறதாம்!

எவ்வளவு பெரிய அபாண்டமான பொய் பார்த்தீர்களா?

ஹங்கேரியிலே ரஷ்யத் துருப்புகள் நுழைந்தபோது இரத்தக் கண்ணீர் பெய்த பிரிட்டிஷ்கார இருதயம் எகிப்திலே அன்னியப்படை—அதுதான் எங்கள் படை—நுழைந்தபோது அணுவும் அசையாமல் நின்று விட்டது!

எங்கள் பிரதிநிதி மட்டுமென்ன; எனது நண்பர் முசோலினி மோலட்டின் பிரதிநிதிகூட ஐ. நா. வில் அப்படித்தான் முழக்கமிட்டார்:

"பிரான்ஸ் நாடு இன்னொரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட விரும்பவில்லை. ஆனால் அதே நேரம் ஒவ்வொரு நாட்டின் உள் விவகாரங்களும் (பிறர் தலையீடின்றி) தங்கள் தங்களாலேயே தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் விரும்புகிறது!"

—இப்படிக் கூறி பிரெஞ்சுப் பிரதிநிதி காரனெட் ஜேனடிலி ஹங்கேரியின் உள் விவகாரங்களில் ரஷ்யா பிரவேசித்திருப்பதைக் கண்டித்தார்.

அங்கே கண்டித்தோம்; அடுத்த கணமே புலியெனப் பாய்ந்தோம், எகிப்து மீது!

"சர்வதேசச் சட்டம் மீறப்படுவதை பிரான்ஸ் பார்த்துக் கொண்டிருக்க முடியாது...சோவியத் துருப்புகள் 'வாபஸ்' ஆவதன் மூலம் இரத்தக்களரி அங்கே தடுக்கப் பட்டாக வேண்டும்!"

—இந்தப் பேச்சிலேதான் எவ்வளவு நேர்மையும் கண்ணியமும் புலனாகிறது!

—ஐ. நா. வில் நடந்த இந்த விவாதத்தைக் கவனித்திருந்தால் இப்படி நாங்கள் திடீரென்று படையெடுத்து வருவோம்—என்று நாசர் கனவில் கூட நினைத்திருக்கமாட்டார்.

—ஆனால் ஐ. நா. வின் தீர்மானத்தை ஆதரிப்பதுபோல் நாங்கள் இருவரும் சேர்ந்து

தொடர்ச்சி 9-ம் பக்கம்

காதலுக்குக் கண்ணில்லை

தில்லை வில்லாளன் எம்.ஏ

[காவலாளிக்குப் பயமும், ஆசையும்—கடைசியில் சம்மதிக்கிறான்.

பழிதீர்த்தான் மன்னனைப் பார்க்கிறான்—அழுகிறான்.]

வெ. ம.: கண்ணீர் விடாதே—கவலையை விடு. நாளை காலை நயவஞ்சகனின் வாளுக்கு என் தலை இரையாகி விடும். ஆனால் அதற்கு இவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும், இன்றில்லா விட்டாலும் இன்னும் இருபதாண்டுகள் கழித்தாவது! என் மகன் ஏழு மாதக் குழந்தை. அவனைக் காப்பாற்றுவது உன் கடமை. தந்தைக்குச் செய்த பழிக்குப் பழி வாங்க அவனைப் பக்குவப் படுத்து. பழிதீர்த்தான் என்று பெயர் படைத்தாய்; பெயருக்கேற்றபடி நான் மன்னன் என்பதற்காகக்கூட அல்ல; உன்னை உயிரென நேசித்த ஒரு முதியவன் என்பதற்காக, கூடவே இருந்து குடி கெடுக்கும் குடிலர்கள் உலகில் வாழக் கூடாது என்பதற்காக, துரோகத்தின் முடிவு வீழ்ச்சி யென்று உலகத்திற்கு எடுத்துக் காட்டுவதற்காக, பழி வாங்கு! என் மூத்த மகன் என்று எண்ணியே இதைக் கூறுகிறேன். அப்போதுதான் என் ஆவி சாந்தி பெறும். மகனேஓடு! நேராக கள்ளமிலாளிடம் சென்று, குழந்தையைப் பெற்றுக் கொள்.

[பழிதீர்த்தான் வேகமாகத் திரும்புகிறான்.]

❋

[அரசி தேம்பித் தேம்பி யழுகிறாள். தேற்றுகிறான் பழிதீர்த்தான். ஏழு மாதக் குழந்தையை அவன் கையிலே கொடுக்கிறாள்.]

அரசி: நல்லவனே! இந்தக் குழந்தையை, உலகில் வாழச் செய்து, தந்தைக்கு ஏற்பட்ட பழியை அழித்திட வழி செய்வது உன் கடமை. நான் என் இடத்திற்குப் போகிறேன்.

பழி: எந்த இடத்திற்கு?

அரசி: அவர் சென்ற இடத்திற்கு!

❋

[வெட்டிய தலை, வீதியின் நடுவில் வைக்கப்பட்டிருக்கிறது. காகித முடி போடப்பட்டிருக்கிறது. அவ்வழியே குழந்தையை மறைத்தெடுத்துக் கொண்டு பழி தீர்த்தான் போகிறான்.]

❋

[பழிதீர்த்தான் ஒரு குதிரை வீரனிடம் பேசுகிறான்.]

பழி: வீரனே, சொன்ன இடம் நினைவிருக்கிறதா? அழகாபுரி மாந்தோப்பு ஓரம், மண் குடிசை, பெயர் நீலவானத்தான்!

[வீரன் ஓடுகிறான்.]

❋

[வீரன், வெள்ளை மனத்தானின் மகனை, [நீலவானத்தானிடம் கொடுக்கிறான். ஒரு பை பணமும் தருகிறான். அவன் குழந்தையை வாங்கி அணைத்துக் கொள்ளுகிறான்.]

காட்சி--11

பழி: (ஆளவந்தானிடம் முன் கதை சொல்லி விட்டு,) அந்தக் குழந்தைதான் நீ, ஆளவந்தா! நீ, இந்நாட்டை ஆளப்பிறந்தவன். மன்னன் வெள்ளை மனத்தான் பெற்றெடுத்த செல்வம்.

ஆள: என் தந்தையின் தலையைத் துண்டித்தானே அந்தக் காட்டுக் குணத்தான், அவன் எங்கிருக்கிறான்? அந்தப் பாதகன் வாழும் பதி எது? இப்பொழுதே புறப்படுகிறேன்.

பழி: வீரனே, அந்த வீணன் இறந்து விட்டான்.

ஆள: இறந்து விட்டானா? இறப்பு ஓட்டப் பந்தயத்தில் போட்டியாளன் போலல்லவா ஓடுகிறது. கொஞ்ச நாள் அவனை விட்டு வைத்திருந்தால் இதோ இந்த வீரவாளால், விருந்து நடத்தியிருப்பேனே!

பழி: (அவன் கரங்களைப் பிடித்துக் கொண்டு) உன் வீரம் வீணாகி விடவில்லை தம்பி—கொன்றவன் செத்தானே ஒழிய, சொல்ல ஏவியவன் வாழ்கிறான்.

ஆள: ஏவிய பாவி யார்? கிளம்பிடு அண்ணா இப்போதே!

பழி: தம்பி, உன் தந்தை யாரை நண்பன் என்று கருதினாரோ, யாரை நம்பினாரோ, யாரை முழு மனதோடு நேசித்தாரோ அவன்தான் அவரைக் கொல்ல ஏவினான். தம்பி, வேதனையான கதை இது. இந்த உலகில் அன்பை விதைத்து துரோகத்தை அறுத்தெடுக்க வேண்டியிருக்கிறது!

ஆள: அந்தத் துரோகி உயிரோடு உலவுகிறானா? யார் அந்த துன்மார்க்கன்? தந்தையின் தலையைத் துண்டிக்க சதி செய்த சண்டாளன்?

பழி: நான் உன்னை அவனிடம் அழைத்துச் செல்கிறேன்.

ஆள: அந்தத் துரோகியிடமா அழைத்துச் செல்கிறீர்கள்? அந்தச் சண்டாளன், என் தந்தையின் தலையைத் தரையிலே சாய்த்ததனால் பெற்றது என்ன?

பழி: அவன் பெற்றது என்னவென்றா கேட்கிறாய்? தம்பி, அந்நாட்டின் முடி அவன் சிரத்தின்மேல் போய் விட்டது என்றே வைத்துக் கொள்—இதைவிட என்ன வேண்டும்?

ஆள: சிரம்மீது முடியிருந்தாலென்ன—அரைக் கணத்தில் அவனைப் பிடி சாம்பலாக்கிக் காட்டுகிறேன். அந்தச் சாம்பல் தூள் கிடக்க, அவன் இடந்தேடிக் கொள்ளட்டும். அண்ணா, அந்தக் கயவனைக் காட்டு—நம்பிக்கைத் துரோகம் செய்த நயவஞ்சகனை என்னிடம் காட்டு — அவன் இரும்பு மனிதனோ—அவன் இதயம் எஃகுக் கவசம் பூண்டதோ—அவன் படை வரிசைகள் புடைசூழவே எப்போதும் இருப்பவனோ—அண்ணா அதைப்பற்றிக் கவலை வேண்டாம். ஈட்டிகள் இடையிலே புகுந்து, வாள்கள் மத்தியிலே நுழைந்து அவனது இருட்டு இருதயத்தில் இந்தப் பளபளக்கும் வாளை நுழைத்து, கடைசி துளி இரத்தம் விழும் வரை போராடுவேன்! அண்ணா அந்த அற்பனை எனக்குக் காட்டு! அவனைக் கொல்கிறேன்.

பழி: அவசரக்காரன் தம்பி நீ—அவனைத் திடீரெனக் கொல்வதாலே எப்படிப் பழிக்குப் பழி தீர்த்ததாகும்? சாவு, சகலருக்கும் அந்த நாளிலிருந்து வரும் மூதாதையர் சொத்தாயிற்றே! சாவு, திடீரென ஒருவனை அணுகினால், அவனை உலகம் பாராட்டுமே' நீ, உன் தந்தையை வஞ்சித்த அக்கிரம புத்திக்காரனுக்கு அத்தகைய சாவையா தர விரும்புகிறாய்? தம்பி, உன் தந்தை, துரோகம் செய்யப்பட்டார். இதோ உனக்குப் பழிவாங்க சந்தர்ப்பம் காத்திருக்கிறது. நீ அந்தப் பழிகாரன் தலையை வெட்டி, அதற்கு காகிதமுடி போட ஆயிரம் பொன் என அறிவி—அதுதான் பழிக்குப் பழி வாங்கியதாகும்! நான் உன்னை அரண்மனைவாசியாக்குகிறேன். துரோகியோடு சேர்ந்து உண்—உறங்கு—ஆனால் பழி வாங்க மறந்து விடாதே!

ஆள: உண்பதா, அந்த உலுத்தன் தரும் உணவையா?

பழி: உலுத்தன் உன்னிடமிருந்து பறித்துக் கொண்ட உணவு—ஆகவே அது பற்றிக் கவலைப்படாதே! உன் வாயெல்லாம் இனிக்கும்—உடலெல்லாம் இன்பம் ஓடும்! பழிக்குப் பழி—அதுவும் இது இன்பமான பழிக்குப் பழி—இனிப்பு குழைக்கப் பட்ட பழிக்குப்பழி—அவனோடு நீங்காத நிலவாக இரு. அவன் மது வருந்தினால் — நீயும் அருந்து. அவன் எச்சில் கோப்பையிலிருந்து — அவனது அணுக்கத் தொண்ட

❋ தொடர்ச்சி 8-ம் பக்கம்



நாடகம்

காட்சி: 9

போலீஸ்
பொன்னுரங்கம் வீடு.

[பொன்னுரங்கத்தின் மனைவி மரகதம்—தூங்கிக் கொண்டிருக்கிருள். குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கிறது. ஆனைமூஞ்சிப் பிள்ளையின் ஆட்களால் துரத்தப்பட்ட கறுப்பன் ஓடிவந்து அந்த வீட்டுக்குள் நுழைகிருன். நுழைந்தவன் மீண்டும் தெருக் கதவுப் பக்கம் ஓடி கதவைத் தாளிட்டுக் கொண்டு, உள்ளே வந்து அங்குள்ள ஒரு மறைவுத் தட்டியின் பின்னே ஒளிந்து கொள்கிருன். சற்று நேரத்திற்கெல்லாம் கதவு தட்டப்படுகிற சப்தம்—தூங்கிக் கொண்டிருந்த மரகதம் விழித்துக் கொண்டு, சற்று வியப்புடன் சென்று கதவைத் திறக்கிருள். பொன்னுரங்கம் அசதியோடு உள்ளே வருகிருன். மரகதம் முகத்தில் ஏதோ ஒரு மாற்றம் இருப்பதைக் கண்டு ஆவலுடன்...]

பொன்: என்ன மரகதம்; ஏன் ஒரு மாதிரி யிருக்கே?

மரக: ஒண்ணுமில்லே—தூங்கினேன்......நான் படுக்கும் போது கதவைத் தாழ்ப்பாள் போடாமதத்தான் படுத்தேன். நீங்க வந்துடுவீங்களேன்னு நினேச்சு!...

பொன்: அப்பறம் எப்படி கதவு தாழ்ப்பாள் போட்டுக்கிட்டது!......நீ ஞாபக மறதியிலே உளராதே!...

மரக: எனக்கு ஞாபக மறதியே எப்போதும் கிடையாதே...

பொன்: சரிதான் போ!... ஞாபக மறதியை அஸ்திவாரமா வச்சுத்தான் நம்ப அரசாங்கமே சுழலுது! நீ என்னமோ உனக்கு ஞாபகமறதி கிடையாதுன்னு கித்தாப்பு பேசிக்கிறே!

மரக: ஏன்; ஏதாவது புதுசா உங்க அரசாங்கத்துக்கு ஞாபக மறதி வந்திருக்கா?...

பொன்: ஞாபகம்னு ஒண்ணு இருந்துல்ல; நம்ப அரசாங்கத்துக்கு மறதின்னு ஒண்ணு ஏற்படப் போகுது!

மரக: சரிதான் போங்க; ஞாபகம் இல்லாமலா மாசா மாசம் சம்பளத்தை வாங்கிக்கிருங்க!...

பொன்: சம்பளம் வாங்குவது ஞாபகம் ஏற்பட்டு நடக்கிற காரியமா? அட பைத்தியம்; அது ஒரு தியாக உணர்ச்சி! ஒரு கடமை! வெள்ளைக்காரர்கள் அதிக சம்பளம் வாங்குகிருர்கள்; அதைக் குறைக்க வேண்டுமென்று சுதந்திரப் போராட்டத்தின்போது கூச்சல் போட்டது இபபோது ஞாபகம் இருந்தால் அதே சம்பளத்தை இவர்கள் வாங்குவார்களா?

மரக: இன்னும் அதிகமாக வாங்க வேண்டுமென்கிறீர்களா?

பொன்: நான் மட்டும் மந்திரியா இருந்தா அப்படித்தான் சொல்வேன். மந்திரிகள் சம்பளத்தை உயர்த்துக! போலீசார் சம்பளத்தை இன்னும் குறைத்திடுக!—அப்படி ஒரு கோஷமே எழுப்புவேன்—சட்டமே திட்டுவேன்!

மரக: சரி சரி; வீண் பேச்சு எதுக்கு?......சாப்பிட்டுட்டீங்களா, இல்லியா?

பொன்: அதுசரி; இன்னைக்குத்தான் எந்த ராஜாவும் மந்திரியும் வரலியே; நம்ப ராணியோட கையால கொஞ்சம் சாப்பிடுவோம்னு வந்திருக்கேன்; நீ அதுக்குள்ள பீடிகையை ஒருமாதிரி போடுறியே; ஏன்—என்ன சங்கதி? சோறு கீறு இல்லையா?

மரக: ஏது சோறு? இருந்தா இன்னேரம் சும்மாவா இருப்பேன்—கையிலே அரைக்காசு இல்லே; நான் எங்கேருந்து சோறு கொண்டு வர்ரது?

பொன்: தினம்—காசு! காசு! காசு! சோறு கேட்டா இதே எழவாப்போச்சு!

மரக: நான் என்ன ''மணிமேகலை''யா, அட்சய பாத்திர மகிமையாலே சோறு கொண்டு வர்ரதுக்கு? தினமா உங்களுக்கு நான் இப்படிச் சொல்றேன். நான் பட்டினி கிடந்தாவது உங்களையும் பிள்ளையையும் பாத்துக்கிறேன். மாசத்திலே நாலைஞ்சு நாள் இப்படித்தான் இருக்கு!...

பொன்: நாள் முழுக்க பாடு பட்டுட்டுத் திரும்புறேன்; நீ கொஞ்சங்கூட இரக்கமில்லாம சோறு இல்லேன்னு சொல்றே! பக்கத்து வீட்லியாவது நாலு ரெண்டு கடன் வாங்கி ஆக்கிப்போடக்கூடாதா?

மரக: பக்கத்து வீடும் போலீஸ்காரங்க வீடுதானே!

பொன்: சட்! இந்தப் போலீஸ்கார வேலையை விட்டுட்டு எங்கயாவது போயி திருடினுலும் மனிதன் நிம்மதியா வாழ முடியும்!

மரக: அய்யோ, அப்படித் திருடி கிருடி மாட்டிக்காதிங்க! அப்புறம் ஜெயிலுக்குப் போனு அங்கேயிருக்கிற கைதிகள் உங்களை லேசிலே விட மாட்டாங்க!

பொன்: ஏன், என்ன செய்வாங்க?

மரக: என்ன செய்வாங்களா? கைதிகள் சமுதாயத்தை நீங்க என்ன பாடு படுத்தியிருக்கீங்க—அதுக்கெல்லாம் அவுங்க பழி வாங்கிடுவாங்களாம்! இது எனக்கு எப்படித் தெரியும்ணு; எங்க சின்னம்மா மகன் ஜெயிலுக்குப் போயிருந்தபோது அங்க இப்படித்தான் நாலைஞ்சு போலீஸ்காரங்க கைதிகளா வந்து, கைதிகளுக்கிட்ட படாதபாடு பட்டாங்களாம்! ஆமாம்; அப்படி கைதிகளை நீங்க என்னதான் கொடுமை செய்வீங்க?

பொன்: ஒரு கொடுமையும் கிடையாது! போலீஸ்காரங்க எல்லாருமா அப்படி இருப்பாங்க! யாரோ ஒருத்தன் ரெண்டு பேரு தப்பு செய்வான்; அதுக்காக போலீஸ்காரர்கள் முழுக்க பொல்லாதவர்கள் என்று சொல்லி விடுகிறதா? போலீஸ்காரனும் மனுஷன் தானே!

மரக: இந்த சாதாரண உண்மை நம்ப சர்க்காருக்குத் தெரியலியே......

பொன்: எந்த உண்மை?

மரக: அதான்; நம்பளும் மனுஷாள்தான் என்பது!

பொன்: சர்க்காருக்கு எப்படித் தெரியும்? மந்திரிகளும், பெரிய அதிகாரிகளும் தான் மனிதர்கள்; மற்ற சில்லறை அதிகாரிகள், உத்யோகஸ்தர்கள் எல்லாம் தேவர்கள் என்பது அவர்கள் அபிப்பிராயம்!

மரக: தேவர்களா? அப்படின்னு?

பொன்: தேவர்களுக்குத் தானே பசிக்காதுன்னு புராணத்தில சொல்லுது!



வழக்கறிஞர் வி. சிவப்பிரகாசம் பி.ஏ. பி.எல். அவர்களுக்கும், திருவீழிமிழலை கிராம முன்சீப் திரு ஏ. ஆர் எஸ். கல்யாணசுந்தரம் அவர்கள் குமாரி பரமேசுவரிக்கும் 26—10—56 காலை 10-மணியளவில், அண்ணு அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராஜன், தோழர்கள் சி. பி. சிற்றரசு, கருணுனந்தம், க. இராசாராம், 'சுதந்திரம்' ஆசிரியர் கே. அருணுசலம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்; இறுதியில் மணமகன் நன்றி கூறினர். மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும். வாழ்த்துக்களும் வந்தன. குழிக்கரை பிச்சையப்பா குழுவினரின் நாதசுவர இன்னிசை நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

நவம்பர் 15-ம் தேதியன்றே உங்களுக்குக் கிடைக்கும்!

❋

சத்தான கருத்துக்களைக் கோர்த்துத்தரும்

முத்தாரம்

★ பல் சுவை அமுதம்! நன்மணிச் சேர்க்கை!

★ கண்ணும் கருத்தும் விருந்துபெறும் ஒப்பற்ற அறிவுப் புதையல்!

இன்றே உங்கள் பிரதிக்கு விற்பனையாளரிடம் சொல்லி வையுங்கள்.

மரக: ஆமாம், ஆமாம்...அவர்களுக்கு கண்கள்கூட இமைக்காதாம்!

பொன்: இந்த சர்க்காரில் அப்படியல்ல; நாம் இமைக்கக் கூடாது!

மரக: தேவர்கள் கால் கீழே படாதாமே!

பொன்: ஆனால் இங்கே; கால் ஓயவே கூடாது — காங்கிரஸ் மந்திரிகளுக்குப் பாரா கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும்!

மரக: தேவர்கள் உணவு அமிர்தமாச்சே!

பொன்: நம்ப உணவு விஷம்! இதுவும் அதே கடலில் கிடைத்ததுதானே!

மரக: அப்படின்னா நம்ப பூதேவர்கள்?

பொன்: பூதேவர்களா? "பூ"ன்னா நூல் வேணும்! நம்ப வெறும் மூதேவர்கள்! நீங்க மூதேவிகள்!

மரக: "பூ"ன்னா நூல் வேணுமா? புரியலியே!

பொன்: பூகட்டுவதற்கு நூல் வேண்டாமா; அதைச் சொல்றேன். பூநூல்!

மரக: ஓகோ; பூணூலா? அத்தான்! நீங்க திருடினாலும் தேவலாம்னு சொன்னீங்களே; அதைவிட ஒரு நல்ல வேலை எனக்கு ஞாபகம் வந்துது!

பொன்: என்னாது?

மரக: புரோகிதம் பண்ணலாமே!

பொன்: நானா? சரிதான்! நம்பறது யாரு; என்னை!

மரக: வேற ஊருக்குப் போய்ட்றது...அங்க போயி புரோகிதர்னு சொல்லி ஒரு பூணூலே மாட்டிக்கிறது!

பொன்: மந்திரம் தெரிய வேண்டாமா?

மரக: ஏதாவது உளறினால் போதும்—யாருக்குப் புரியப் போகிறது! நம்ப கல்யாணத்திலே அய்யர் வந்து மந்திரம் சொன்னாரே; நமக்கு என்னான்னு புரிஞ்சுதா?

பொன்: அது என்னான்னு இரண்டு நாளைக்கு முன்னே எனக்குப் புரிஞ்சது!

மரக: என்னாத்தான்?

பொன்: ஒரு சு. ம. கல்யாணத்திலே ஒருத்தர் பேசினாரு! ...அப்படித்தான் தெரிஞ்சுது; அடேடே ஏமாந்துட்டோமேன்னு! மரகதம்! நம்ப கல்யாணத்தப்போ என்ன நடந்திருக்கு தெரியுமோ; அந்தப் புரோகிதம் பண்ணின அய்யரு; உன்னையும் என்னையும் ரொம்ப திட்டியிருக்காரு! — "உனக்கு மனைவியாகப் போகிற இந்தப் பெண்ணை வருணன் அனுபவித்தான், வாயு அனுபவித்தான், அக்கினி அனுபவித்தான், இப்போது நீ அனுபவிக்கப் போகிறாய்!"—இப்படியெல்லாம் அந்த மந்திரத்திலே யிருக்கு!

மரக: அடப்பாவி!

பொன்: அது மாத்திரமா? கோதானம் சமர்ப்பயாமி! பூதானம் சமர்ப்பயாமி! கன்னிகாதானம் சமர்ப்பயாமி! அப்படின்னா என்னா அர்த்தம்? ஒரு பெண்ணை எனக்குத்தானமாகக் கொடுன்னு கேட்டிருக்கான்! அதைப் பாத்துகிட்டு நம்பளும் சும்மா உக்கார்ந்து இருந்திருக்கோம்!

மரக: உடனே ஒண்ணு கொடுத்திருக்கணும்ல!

பொன்: என்ன; பெண்ணா?

மரக: சே சே, நீங்கவேற!...

பொன்: அதிருக்கட்டும்; பேசியே பொழுதைப் போக்கிடலாம்னு பாக்கிறியா? பசிக்குதே; என்ன செய்றது?

மரக: செவிக் குணவில்லாத போதுதான் வயிற்றுக்கு ஈயப்படும்னு திருக்குறள்ள சொல்லியிருக்கு!

பொன்: திருவள்ளுவர் காலத்திலே காங்கிரஸ் ராஜ்யமா நடந்தது!......அப்ப நல்ல ராஜ்யம் நடந்துச்சு; அதனால அவர் அப்படி எழுதினாரு! வயிற்றுக்கு ஈயப்பட்ட பிறகு செவிக்குணவு ஈயக்கூடாதுன்னு அவர் சொல்லலியே! மரகதம்! நீ சொல்ற சித்தாந்தப்படிதான் ராஜ்யத்தை நடத்துறாங்கன்னு நான் நினைக்கிறேன்! ஏன்னா; மந்திரிமார்கள் நாள் பூரா பேசிக்கிட்டேயிருக்காங்க; ஜனங்கள் செவிக்குணவை அருந்திவிட்டு வயிற்றுக் கவலையை மறந்திருப்பார்கள் என்று நம்புகிறார்கள் போலும்; பாவம்!

மரக: சாப்பாடை மறக்கிற அளவுக்கு மந்திரிகள் பேச்சு அவ்வளவு ரசமாகவா இருக்கிறது?

பொன்: நல்லாச் சொன்னே; போ! நவரசம் என்பார்களே; அதிலே மோசமான ரசங்களின் 'ஸ்பெஷலிஸ்டு'களாயிற்றே அவர்கள்! எதிர்க் கட்சிகளைத் தாக்கிப் பேசும் போது பத்தாவது ரசம் பெருக்கெடுத்தோடும்!

மரக: பத்தாவது ரசமா? அது என்ன ரசம்?

பொன்: விரசம்!

மரக: ஓகோ!

பொன்: போகட்டும்; ரசமாவது கொஞ்ச நஞ்சம் இருக்கா?

மரக: ஓ; அது நிறைய இருக்கு!

பொன்: என்ன ரசம்!

மரக: சரசம்!

பொன்: இந்தபாரு; மரகதம்! என்னாலே சாப்பிடாம இனிமேப் பேச முடியாது; அதுக்கு ஏதாவது வழி பண்ணு!

மரக: எங்கயாவது போயி கொஞ்சம் அரிசி வாங்கிட்டு வாங்க; அரை நொடியிலே பொங்கிப் போடுறேன். நான் இந்தப் பக்கத்திலே எல்லா எடத்திலும் கேட்டுப் பாத்தாச்சு!

பொன்: சரி; போய்ட்டு வர்றேன்...

(என்று கிளம்புகிறான். மறைவுத் தட்டியில் யாரோ அசைவது தெரிகிறது. தட்டியைத் தள்ளிவிட்டுப் பார்க்கிறான். கறுப்பன் இருக்கிறான். மரகதம் திடுக்கிடுகிறாள். பொன்னுரங்கம் குழம்புகிறான். மனைவிமீது அவனுக்கு சந்தேகமே ஏற்பட்டுவிடுகிறது.)

பொன்: ஓகோ...இப்படி நடக்குதா விஷயம்!...

கறுப்: என்னை மன்னிச்சுடுங்க; நான் பயந்துகிட்டு வந்து இங்கே பதுங்கிக்கிட்டேன்...ஆபத்திலே எதுவும் புரியாம....இங்கே....

பொன்: போதும் நிறுத்தடா! உன்னைச் சொல்லி என்ன பயன்! இந்தக் கற்புக்கரசியை அல்லவா கேட்க வேண்டும்! அடிப் பாவி!... எத்தனை நாளாடி இந்தக் காரியம் நடக்குது?

மரக: என்ன சொல்றீங்க? நிதானமாப் பேசுங்க!

பொன்: நான் நிதானமாத்தான் பேசுறேன்......நீ வாயை மூடுடி!

(என்று மரகதத்தை அடிக்கிறான். அவள் அடி பொறுக்க முடியாமல் அலறுகிறாள். கறுப்பன் குறுக்கிடுகிறான். அவனுக்கும் அடிகள் விழுகின்றன.)

கறு: அய்யா! நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். இந்த அம்மாமீது எந்தக் குற்றமுமில்லை...

பொன்: நீயாரடா அதைச் சொல்ல! நிற்காதே இங்கு —போய்விடு — கொன்று விடுவேன்!

[என்று பொன்னுரங்கம் மீண்டும் அடித்துக் கறுப்பனை வீட்டுக்கு வெளியேகொண்டு போய்த் தள்ளுகிறான். அடிபட்ட கறுப்பன், வேதனையால் தாக்குண்டு, தன்னால் ஒரு பெண்ணின் வாழ்வில் புயல் வீசுகிறதே யென்ற கவலையோடு போகிறான்.]

திரைவிழுகிறது.

—(தொடரும்)

❋

நவம்பர் 20-ம் தேதி வெளிவருகிறது!

எழிலும் ஏற்றமும் குலுங்கும் கலையுலக ஏடு

"வெள்ளி வீதி"

மு. கருணாநிதி எழுதும்

"என்னைப் பற்றி..."

தொடர் கட்டுரையுடன்!

வெள்ளி வீதி, சென்னை—6.

இலங்கையில் கி. மனோகரன்

நிகழ்ச்சிகள்

நவ. 9: திருக்குறள் மன்றம்—பதுளை

,, 11-12: யாழ்ப்பாணம்

,, 15: இலங்கை தி. மு. க. வரவேற்புக் கூட்டம்

,, 17: தி. மு. க. கிளை ஆண்டு விழா—பொரளை

,, 18: தி. மு. க. திறப்பு விழா புறக்கோட்டை. மாலை: சிறப்புச் சொற்பொழிவு.

அறிவிப்பு

அண்மையில் திருச்சியில், முதலமைச்சர் காமராசரும், பிறரும் பேசிய காங்கிரஸ் கூட்டம் ஒன்றில் குழப்பம் ஏற்பட்டதாகவும், அக்குழப்பத்திற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்றும் சில செய்தித் தாள்கள் வெளியிட்டுள்ளன.

திருச்சியிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தை விவரம் கேட்டதில், அக்குழப்பத்திற்கும், கழகத்திற்கும் சிறிதும் சம்பந்தமில்லையென்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி இழித்தும் பழித்தும் பேசுவதைப்பற்றி நம் கழகத் தோழர்கள் பொருட்படுத்த வில்லையென்பதை அனைவரும் அறிவர். கழகத் தோழர்கள் அந்தக் கண்ணியத்தைக் கடைப்பிடித்து வரும்போது அதற்கு மாறான செய்திகளை வெளியிடும் செய்தித் தாள்களின் போக்கு மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

---தலைமைக் கழகம் (தி. மு. க.)

காதலுக்கு...

✻ 5-ம் பக்கத் தொடர்ச்சி

ஞக இரு. அவன் உன் மேல் அன்பையும் நம்பிக்கையையும் பொழியும்படி நடந்து கொள். அவனது இரகசியங்களில் நீ பங்கு பெறு. அவனை நேசி—நெருங்கு—நம்பு—எல்லாம் நடிப்புக்காகத்தான்! அவன் உன்னை மகிழ்ச்சியோடு இரு என்றால் நன்றாக சிரித்து மகிழ்ச்சியைக் காட்டு. அவன் முன்னால், நீ சோகமாக இருப்பது தான் அவனுக்கு திருப்தி தருகிற தென்றால் நீ வாடிய முகத்தோடு இரு—ஆம், காலம் கனிகிற வரை காத்திரு. (அவன் தன் வாளைத் தொடுகிறான்.) கூடாது, கூடாது தம்பி, அவசரமும் கூடாது; ஆத்திரமும் கூடாது. உன்னை நான் நம்ப முடியாது. உன் சூடேறிப் போன குருதியும், முறுக்கேறிப் போன நரம்புகளும் உன்னைக் கட்டுக்கடங்காமல் விரட்டி விடும் என அஞ்சுகிறேன். இந்தப் பழிவாங்கும் படலத்தில், முரட்டுக் கோபம் கூடாது. பழி வாங்க முடியாது. பழி வந்து சேரும்!

ஆள : அண்ணா, என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆளை முதலிலே காட்டு. வாள் வீச்சும் நாளை நான் பார்த்துக் கொள்கிறேன்.

பழி : தம்பி, காலம் கனிந்து விட்டது. காரியம் செய்யப்பட வேண்டியது உறுதிதான் என்று தெரிந்தவுடன், நான் இரகசியமாக சேதியனுப்புவேன். அதுவரை உன் வாள் வேலையற்று தூங்க வேண்டும்.

ஆள: சரி, அண்ணா. அவனைக் கொல்லும் விதந்தான் எப்படிச் சொல்!

பழி: அவனது தனியான அறையில் அடங்கிக் கிடக்கிற நாளில் — ஆம், அந்த நாளை மறந்துவிடாதே!

ஆள: மறப்பதா? நான் இறந்துவிட்டால், மறந்து விடுவேன்.

பழி : நீ இறப்பதா? நீ வாழ வேண்டியவன் தம்பி.

ஆள : அவன் என்று தூங்குவான்-நான் என்று வாளேந்துவேன்?

பழி : குற்றம் புரிந்தோர், தூங்குவது கடினந்தான். ஆனால் என்றாவது ஒரு நாள் தலை சாய்ப்பான். அன்று மறந்து விடாதே — அவன் அருகே செல்-தட்டி எழுப்பு தடியனை—அவன் விழிக்கு முன் அவன் குரல்வளையை ஒரு கையால் அழுத்திக் கொள். அவன் விழிப்பான், விழிகள் பிதுங்கியபடி, நீ சிரி, சிரி-உன் ஆத்திரம் அடங்கும் வரை சிரித்து விட்டுச் சொல், சேதியை-நீ எந்த இரத்தத்திலிருந்து உதித்தவன் என்று-யார் உன் தந்தை என்று. சொல்லிய பிறகு அவனைக் கேள் உன் உயிருக்கு ஒருவிலை வையென்று! அவன் தன் கருவூலப் பொன் நாணயங்களைக் கூறினால் வெறுப்போடு சிரி—'பொன்னுக்காக வர வில்லையடா நான்; தந்தைக்குச் செய்த பழிக்குப் பழி வாங்க வந்திருக்கிற மகன் நான்; என்னிடம் கருணையை எதிர்பார்க்காதே' என்று கூறிஅவன் நெஞ்சில், வாளைச் சொருகு! அவன் நெஞ்சிலே வஞ்சகம், சூது, சூழ்ச்சி, துரோகம் எதுவும் ஒளிந்து கொள்ளாமல் தேடியெடு! ஆனால் தம்பி, நீ, நான் சொல்லும் வரை கொல்வதில்லையென்று உறுதிமொழி தர வேண்டும். இல்லாவிட்டால், உன்னை தனியே விட்டு நான் போய் விடுவேன். உன் தந்தையைப் பழி வாங்கியவன் யார் என்றும் தெரியாது — பழிக்குப் பழி வாங்கவும் முடியாது!

ஆள: என் புனித தந்தையின் நினைவாக, அவரது அநியாயச் சாவின் நினைவாக, அவர் நண்பராலேயே துரோகம் செய்யப்பட்டார் என்ற நினைவோடு உறுதிமொழி தருகிறேன்—அண்ணா உன் கட்டளை கிடைக்கும்வரை, அந்தக் கயவன் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும், சாகப் போகும் நாயின் உயிர் தவிப்பது போல! ஆனால், நான் பழி தீர்க்கலாம் என்று அறிவிக்கும் அடையாளம் எது? சொல், அண்ணா!

பழி: இந்த வாள்தான், தம்பி, இது உன் தந்தையுடையது!

ஆள: ஆ, தந்தையின் அந்த வாளை நான் நன்றாகப் பார்க்கிறேன். என் ஆர்வக் கண்களை அகல விரித்து, ஆவல் அடங்கும்வரைப் பார்க்கிறேன். எஃகால் அடிக்கப் பட்ட வாள்கள்தான் எனக்குப் பிடிக்கும். இது என் இலட்சியத்தை ஈடேற்ற வந்த போர்வாள். அண்ணா, என் தந்தை எனக்கு ஏதும் சேதி சொல்லவில்லையா? சொல் அண்ணா, தயங்காமல் சொல்.

பழி: சேதி என்னடா தம்பி, வேண்டும்? பழிக்குப் பழி—அதுதானடா உன் தாயும் தந்தையும் உனக்கு இட்ட கட்டளை. உன் தந்தை, தாய் பட்ட துயரை நினை...

ஆள: அந்த துயரக்கதையை நினைவூட்டாதீர்கள். ஐயோ, என்னால் தாங்கமுடியவில்லை —என் இதயம் தூள் தூளாகிவிடும் போலிருக்கிறது—தாய் மடிந்தாள், தந்தையின் தலையோ முச்சந்தியில் காகித முடி போட்டு கேலி செய்யப்பட்டது. அவரால் நல்ல நண்பன் என்று நம்பப்பட்ட நயவஞ்சகனால்—அந்தோ, இடிமேல் இடி—இடிந்துவிழும் கோபுரத்தின் மீது நிற்கிறேன்—சரிகிறது, கோபுரம்—நான் சரிகிறேன் — விழுகிறேன் — புதுப்புது தூதுவர்கள்போல் வந்துஒவ்வொரு துயரச் செய்தியும் என்னை பிளந்தெறிகின்றன —என் இரத்த ஓட்டம் நின்றுவிடும் போலிருக்கிறது நான் மூச்சிழந்துவிடுவேன் போலிருக்கிறது—என் காதுகளோ, செவிடாகிவிடும்போலிருக்கிறது!

பழி : தம்பி, மனதைச் சிதற விடாதே! தந்தையிட்ட கட்டளையை நிறைவேற்ற நான் துணையிருக்கிறேன்.

ஆள : நன்றி செலுத்துகிறேன் அண்ணா, தந்தையின் சார்பிலும், என் சொந்தச் சார்பிலும்! தந்தையின் தலையை வெட்டிய அந்த மதிகேடன் பெயரைக் கூறுங்கள்!

பழி : உன்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையும், உன் தந்தையை நினைவுபடுத்தி, என்னை பழைய நாட்களுக்கு இழுத்துச் செல்கின்றது, தம்பி!

ஆள : அண்ணா, துரோகியின் பெயர்......?

பழி : நாளை கதிரவன் எழும் வரை காத்திரு. பெயரைச் கேட்டாயே தம்பி, கொஞ்சம் பொறுமையோடிரு—பெயரைச் சொல்வதோடு மட்டுமல்ல—ஆளையே காட்டுகிறேன்.

ஆள : அண்ணா, அவனைக் காட்டுங்கள்-அடுத்த கணத்தில்... (இடையிலே செருகியுள்ள வாளை அசைக்கிறான்.)

பழி : வாளை — அதற்குள்ளாகவா மறந்து விட்டாய், தம்பி—வாக்குறுதியை மீறுவதானால், இதோ இப்பொழுதே சென்று விடுகிறேன்.

ஆள : அண்ணா மன்னியுங்கள்-ஆளைக் காட்டுங்கள்.

பழி : தம்பி, நாளை அழைத்துச் செல்லுமிடத்தில் நான் ஒருவனை அடிபணிந்து தொழுவேன்—அவன்தான் அந்தப் பழிகாரன்—உன் தந்தையின் தலையைத் துண்டித்த வஞ்சகன்-அதுவரை பொறுத்திரு.

காட்சி—12

[புலிவலன் கொலுமண்டபத்திற்கு ஆளவந்தானைக் கூட்டிப் போகிறான், பழிதீர்த்தான்.

புலிவலன் காலிலே விழுந்து வணங்கினான் பழி தீர்த்தான்-ஆளவந்தான் அவனைப்பார்த்து ஆச்சர்யத்தோடு விழிக்கிறான்.]

பழி : மன்ன, வணக்கம்.

புலிவலன்: பழிதிர்த்தரே, நேற்று முன் தினம் பதுங்கு மலையோரம் வேட்டைக்கு வந்திருந்தோம், உம்மைக் காண முடியவில்லையே!

[பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஆளவந்தானைப் பார்த்த மன்னன் சிறிது நேரம் திகைப்போடிருக்கிறான். பிறகு கேட்கிறான், அவனைப் பற்றிய விவரங்களை.]

புலி : உம் அருகிலிருக்கும் இவன் யார்?

பழி : இவன் என் தமக்கை மகன்—காளைப் பருவம்—நல்ல போர்த் தொழில் கற்றுள்ளான்—தங்களிடம் சேவகம் செய்யவே துடியாய்த் துடிக்கிறான். அதனால்தான் உடன் கூட்டி வந்தேன்.

புலி : இவன் பெயர்?

பழி : பெயரா—ஆளவந்தான்.

புலி : இவன் ஊர்?

பழி : அளகாபுரி,

புலி : (ஆளவந்தானை நோக்கி) இளைஞனே, நான் உன் கண்களிலே எனது பழைய நினைவுகளைப் பார்க்கிறேன். எனக்குத் தெரிந்த ஒருவனின் கண்களைப் போல உன் கண்களும் உள்ளன. சரி, நீ என் மெய்ப் பாதுகாவலரில் ஒருவனாக—ஏன் - தலைவனாக பணி புரி—வீரனே, உன் விழிகளிலே வீரத்தையும் விவேகத்தையும் பார்க்கிறேன்.

[மன்னனைச் சுற்றியிருந்த பொய்யன், புரட்டன், புறங்கூறுவோன் என்ற மெய்க்காப்பாளர்கள், வந்தவனைப் புகழ்வதைக் கண்டு முகங் கடு கடுக்கின்றனர்.]

(தொடரும்)

4–ம் பக்கத் தொடர்ச்சி

இப்போது யுத்த நிறுத்தம் செய்திருக்கிறோம்.

இதிலேகூட எங்களுக்கே பரம்பரைச் சொத்தாக இருந்து வரும் ஏகாதிபத்தியக் குள்ளநரித் தந்திரத்தைக் காட்டியிருக்கிறோம்!

எப்படி யெனில், சூயஸ் கால்வாயின் திலகம்போலிருக்கும் போர்ட் செட் துறைமுகம் எங்கள் கையில் இருக்கிறது!

அது எங்கள் வசம் இருக்கும் வரையில் சூயசின் முதுகெலும்பு எங்களிடமிருப்பதாகத்தான் அர்த்தம்.

அந்தத் துறைமுகம் பிடிபட்ட பிறகுதான் யுத்த நிறுத்தத்தை ஒப்புவதாக ஒப்புக்கு ஒரு வார்த்தை சொல்லி வைத்தோம்.

அடுத்து இன்னொரு விஷயம்! ஐ. நா. ஸ்தாபனமே முயன்று ஒரு படையை நிறுவப்போவது தான் உங்களுக்குத் தெரிந்திருக்குமே!

அந்தப் படையில் பிரிட்டிஷ் படைகளும், பிரெஞ்சுப் படைகளும் அவசியம் இருக்க வேண்டுமென்றும், அப்படி எங்களைச் சேர்த்துக் கொண்டால் தான் எகிப்திலிருந்து துருப்புகளை வாபஸ் பெறுவது பற்றி உறுதிகூற முடியுமென்றும் 7–ந் தேதியன்று நான் பேசி யிருக்கிறேன்.

ஐ. நா. போலீஸ் படையில் பிரிட்டனும், பிரான்சும் சேர்க்கப் பட வேண்டும்!

திரண்ட சொத்து ஒன்று கொள்ளை யடிக்கப்படுகிறது. போலீசார் அனைவரும் சேர்ந்து திருடனைப் பிடிக்க முன் வருகிறார்கள்.

அந்தச் சமயம் பார்த்து திருடனே முன்வந்து, "நானும் உங்கள் போலீஸ் படையில் சேர்ந்துகொள்கிறேன்"—என்று கூறினால் எப்படியிருக்கும்?

அப்படித்தான் இருக்கிறது எகிப்து நாட்டிலே கொள்ளை யடித்த நாங்கள், ஐ. நா. போலீஸ் படையிலே சேர்ந்து கொள்ள நினைப்பதும்!—என்று நீங்கள் எல்லோரும் கருதுவீர்கள்!

இதை உணர முடியாத அளவுக்கு மந்தமதி படைத்தவனல்ல நான்! என்ன செய்வது? எங்களைப் பற்றியிருக்கும் ஏகாதிபத்திய உணர்ச்சியானது எதிராளியை மடையன்; கடைந்தெடுத்த அடி முட்டாள் என்று நினைக்கச் சொல்கிறது!

என்னுடைய இந்தப் போர் வெறித் தாண்டவத்திற்கு என் நாட்டு மக்களெல்லாம் பரிபூரண ஆதரவு தருகிறார்கள் என எண்ணுகிறீர்களா?

அப்படியிருந்தால் நான் இவ்வளவு சீக்கிரம் போர் நிறுத்தத்திற்கு வாக்கு தருவேனா? பொது மக்கள் மட்டும் 'நீ செய்வதுதான் சரி' என்று சிரித்து ஜாடை காட்டியிருந்தால் நாசரைப் போர்க்கைதியாக்கி பழிவாங்காமல் இந்தப் போரை நிறுத்துவேனா?



நான் எகிப்து விவகாரத்தைப் பொறுத்த வரையில் புத்தராக மாறி விட்டேன்! —ஐக்.

ஆனால் நான் எதிர்பார்த்தது போலவே எதுவும் நடக்கவில்லை. இந்தப் பொது மக்கள் சும்மா யிருந்தாலும் என்னுடைய படுவைரிகளான லேபர் கட்சிக்காரர்கள் அவர்களையெல்லாம் தூண்டி விட்டுவிட்டார்கள்!

அவர்கள் மட்டுமா? இந்தப் பிரிட்டிஷ் பத்திரிகைகளும் வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்கவில்லை!

அந்த ஏடுகளின் எண்ணங்களை அப்படியே தருகிறேன், படியுங்கள்:

"நாட்டின் ஆதரவு பெறுமல் ஆண்டனி யுத்தத்திற்குப் போய் விட்டார். நாம் அவரை மூட்டை முடிச்சுகளோடு திருப்பி அனுப்பிவிட வேண்டியதுதான்"

"இந்த பலஹீனமான; ஆனால் பிடிவாதமுள்ள மனிதருக்கு பிரதமர் பதவி லாயக்கற்றது. வெறி பிடித்த வெளிநாட்டுக் காரியதரிசியாயிருந்து, பிரதமரான இவர் தனது முடிவு தோற்றதும், இப்படி ஆத்திர மடைந்து செயலாற்றுவது அவருடைய பலத்தைக் காட்டவில்லை; பலஹீனத்தைத்தான் காட்டுகிறது.

"அவர் உண்மையுடன் பணியாற்றலாம்; ஆனால் அது தவறுடையது. மத்திய கிழக்கில் (பிரிட்டன்) ஒரு சாம்ராஜ்யாதிபதி என்னும் கன்சர்வேடிவ்களின் குருட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து இப்போது அவர் செய்ய முயலும் காரியம் சர்வாதிகார ஆட்சி படைத்தரஷ்யாவும் இந்த நவீன காலத்தில் இனிச் செய்ய அஞ்சும் காரியமாகும்!"

"நமக்குள்ள ஒரே ஒரு பலம் நமது நேர்மையின் பாலுள்ள பற்று தான்! அதை அழித்துவிட நாம் சர் ஆண்டனியை அனுமதிக்கக் கூடாது!"

—இவையனைத்தும் 'டேய்லி ஹெரால்டு' பத்திரிகையின் கருத்துரைகள்!

ரஷ்யாகூட இனிச் செய்வதற்குப் பயப்படும் காரியத்தை நான் செய்கிறேனும்!

நான் வெளிநாட்டுக் காரிய தரிசிப் பதவிமட்டுமே வகித்துப் பழக்கப்பட்டவனும்! அதனால் முதல் மந்திரியானதும் நான் என்ன செய்கிறேனென்று எனக்கே தெரியவில்லையாம்!

இன்னொரு பத்திரிகை என்னை இன்னும் கடுமையாகத் தாக்கியிருக்கிறது!

"மேலும் மேலும் ஹங்கேரிக்குள் 'டாங்கி'களை அனுப்புவதன் மூலம் ரஷ்யா சர் ஆண்டனி ஈடனுடைய உதாரணத்தைப் பின்பற்றிக் கொண்டு வருகிறது."

—இது 'மான்செஸ்டர் கார்டியனு'டைய தாக்குதல்!

"இது ஒரு சூதாடி பணயம் வைத்து ஆடும் ஆட்டத்தைப் போன்றது. இதனால் பிரதம மந்திரி தன்னுடைய அரசியல் வருங்காலத்தை மட்டுமின்றி, தனது கட்சி ஆட்சியின் வருங்காலத்தையும், அதைவிட முக்கியமாக இந்த நாட்டின் ஸ்திதி, கௌரவம் — எல்லாவற்றையுமே பணயம் வைத்து சூதாடியிருக்கிறார்.

—இப்படிக் கருத்துக் கதிர்களைச் சிந்தியிருக்கிறது. 'எக்கானமிஸ்ட்' ஏடு!

—இப்படி எட்டு திசையிலிருந்தும் தாக்குதல்கள்!

இதற்கிடையில் என் குருநாதரும், என் போஷகருமான அமெரிக்காவை நான் கலந்தாலோசிக்கவில்லை என்கிற குற்றச்சாட்டு வேறு!

இந்த நிலையில் நான் என்ன செய்யப் போகிறேனோ! என் எதிர்காலம் எப்படி யிருக்கப் போகிறதோ; எனக்கே தெரியவில்லை!

ஐஃனோவர்

ஆனால் எனக்குத் தெரிந்து விட்டது, முடிவு! ஆமாம்; மீண்டும் நான்தான் அமெரிக்காவின் ஜனாதிபதி!

என் உடல் நிலை எந்த நேரத்திலும் பாதிக்கப்படும் என்பது தெரிந்தும், அமெரிக்க மக்கள் அதிகப்படியாக ஓட்டுகள் அளித்து என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்! ஆனால் இந்த வெற்றிக் களிப்பிலும் என் மனம் என்ன பாடு படுகிறது தெரியுமா?

பிரிட்டன் என்னைக் கலந்து கொண்டு போரில் குதிக்கவில்லை என்று சிலர் கூறுகிறார்கள்.

இதற்கு ஆதாரம் என்ன இருக்கிறது?

அவர்களிடம் ஒன்று கேட்கிறேன்,

பிரிட்டனும் பிரான்சும் மாபெரும் வல்லரசு என்கிற நிலைமை பழங்கதையாகி விட்டது. இன்றைய உலகில் அமெரிக்காவும், ரஷ்யாவும் தான் மாபெரும் சக்திகள்!

நிலைமை இப்படி யிருக்க இப்போது பிரிட்டன்—பிரான்ஸ் நுழைவை அமைதியாகக் கவனித்துக் கொண்டிருக்கும் ரஷ்யா, அமெரிக்காவும் எகிப்தை எதிர்த்து போரில் குதித்திருந்தால் அப்போது சும்மாயிருக்காது!

நிச்சயம் செம்படைகள் எகிப்தை நோக்கிப் புறப்பட்டிருக்கும்!

பிறகு...?

உலகப் போர் — ஆமாம்; நான்காவது உலகப் போர் துவக்கமாகி யிருக்கும்!

'அதனால்தான் பிரிட்டனையும், பிரான்சையும் தூண்டி விட்டு நீங்கள் ஏதுமறியாத சாதுவைப்போல அமர்ந்து விட்டீரா?'—என்று என்னைப் பார்த்துக் கேட்டுவிடாதீர்கள்!

அப்படிக் கேட்டாலும் நான் உண்மையைச் சொல்ல மாட்டேன்!

காக்கை உட்கார்ந்துதான் பனம் பழம் விழுந்ததோ; அல்லது தானாகவேதான் விழுந்ததோ — நான் நிலைமையைக் கூறமாட்டேன்!

எப்படியோ பிரிட்டனும் பிரான்சும் 'போலீஸ் நடவடிக்கை' என்கிற போலீச் சமா



காலம் மாறிப்போச்சு; இப்போது, நீ வாயைத் திறக்க வேண்டுமென்கிறது ஹங்கேரி.

தானத்தைக் கூறி போரில் இறங்கிவிட்டன!

"அது போகட்டும்; அந்த இரு நாடுகளும் எங்களைக் கலந்து ஆலோசிக்காமலேயே எகிப்துமீது யுத்தம் தொடுத்து விட்டதாகவே நினைத்துக் கொள்வோம். அப்படியானால் 'உங்கள் நிலைமை என்ன?"— இவ்வாறு நீங்கள் கேட்பது எனக்குப் புரிகிறது!

ஆமாம்; அப்போது அமெரிக்காவின் நிலைமை என்ன?

சங்கடம்தான்!

அமெரிக்கா பிரிட்டன், பிரான்சுக்கு 'கார்டியனாக' மட்டுமல்ல; அந்தரங்க நண்பனாக, ஆதரவாளனாக—இருந்து வந்திருக்கிறது.

நாங்கள் மூவரும் சேர்ந்து இணைபிரியாமல் இருந்ததனால் தான் சர்வதேச அரங்கிலே ஒரு மாபெரும் கூட்டு சக்தியாக விளங்கி வந்தோம்!

இப்போது நடைபெற்றிருப்பதற்கோ, சரித்திரத்தில் ஈடு இணையற்று விளங்கிய அந்தக் கூட்டணி தலை குப்புறக் கவிழ்ந்தது என்று அர்த்தம்!

இதன் விளைவு எப்படியிருக்குமென்று நினைக்கிறீர்கள்? ரஷ்யாவிற்குக் கொண்டாட்டம்தான்!

ஆமாம்; ஊர் இரண்டுபட்டு விட்டது! இனிமேல் அந்தக் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்தானே!

புல்கானின்

கொண்டாட்டமா? — யார் சொன்னது அப்படி? என்பாடு திண்டாட்டமாக அல்லவா இருக்கிறது!

இரும்புக் கோட்டைபோல இருந்தது எங்கள் பிராந்தியம்; அதில் இப்போது வெடிப்பல்லவா ஏற்பட்டுவிட்டது!

ஒற்றுமையின் இருப்பிடம் அது—என்று உலகமெல்லாம் வியந்தது; இப்போது அங்கே பேரிடி அல்லவா விழுந்துவிட்டது!

போலந்து; ஹங்கேரி—இப்படிப் பிரிந்து போகுமென்று நான் எதிர்பார்க்கவேயில்லை. அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து என் இதயத்திலே ஈட்டியைப் பாய்ச்சி விட்டார்கள்!

என்ன இருந்தாலும் பிரிட்டனும் பிரான்சும் புத்திசாலிகள்தான்!

ஹங்கேரி கலகத்தை அடக்குவதற்காக என் துருப்புகளை அங்கே அனுப்பியிருந்தேன்!

போலந்தும் ஹங்கேரியும் எங்கே நமது உறவை அறுத்துக் கொண்டு முதலாளித்துவக் கூடாரத்திற்குப்போய்விடுமோ—என்று ஒரு பீதி என்னையும், எனதருயிர்த் தோழர் குருஷேவையும் பற்றிக் கொண்டு, எங்களை வேறு அலுவல் பற்றி சிந்திக்கவே விடவில்லை!

இந்தச் சமயம் பார்த்து எகிப்துமீது போர் தொடுத்து விட்டார்கள் ஏகாதிபத்திய வாதிகள்!

ஹங்கேரிப் பிரச்சினை மட்டும் இப்போது தோன்றியிருக்காவிட்டால் எகிப்து நிலைமை எப்படியோ ஆகியிருக்கும்!

ஹங்கேரிப் பிரச்சினையால் எனக்கு ஏற்பட்ட தொல்லைகள் ஒன்றா; இரண்டா? ஏராளம்! ஏராளம்!!

(1) முதலாவதாக, ஹங்கேரியில் ஏற்பட்டிருக்கும் ரகளையைச் சாக்கு வைத்துக் கொண்டு எங்கே அமெரிக்கா ஏதாவது சூது செய்துவிடுமோ—என்கிற கவலை ஏற்பட்டு எனக்கு சரியாக சாப்பாடே செல்லவில்லை.

(2) அடுத்ததாக, ஹங்கேரிப் பிரச்சினை எனது மூக்கையே அறுத்துவிட்டது! எப்படியென்று கேட்கிறீர்களா? இதோ சொல்கிறேன்:

ஹங்கேரியில் ஏற்பட்ட கிளர்ச்சியை நெஞ்சில் சிறிதும் ஈவு இரக்கமின்றி அடக்கி ஒடுக்க நான் எனது செம்படையை அணி அணியாய் அனுப்பியிருந்தேன்.

இப்போது அதேபோலவே தான் சூயசைத் தன் வசப்படுத்த பிரிட்டனும், பிரான்சும் தனது படைகளை அனுப்பி வைத்திருக்கிறது.

—இதில் நானும் குற்றவாளியாயிருக்கிறேன்.

இந்த நிலையில் இதே குற்றத்தைச் செய்திருக்கும் பிரிட்டன், பிரான்சை நான் எந்த முகத்தை வைத்துக்கொண்டு குற்றம் சாட்ட முடியும்?

எனது நிலைமை பற்றி சிறிது விளக்கமாகவே கூறுகிறேன், கேளுங்கள்!

சர்க்கஸ்காரன் சிங்கத்தின் வாயில் தனது தலையைவிட்டு வேடிக்கை காட்டுவதைப் பார்த்திருப்பீர்கள்!

ஸ்டாலின் காலத்தில் இது தான் நடந்தது. அதாவது ஹங்கேரிபோன்ற சிங்கங்களை உரிமைக் குரல் எடுக்காமல் தடுத்து, அவைகளின் வாயில் தனது தலையை விட்டு சர்வதேச அரங்கிற்கு வேடிக்கை காட்டும் அளவிற்கு அவர் தயார் செய்து வைத்திருந்தார்.

இப்போது காலம் மாறிப் போச்சு!

அந்தச் சிங்கம் சுதந்தரமாகத் திரியும் இதர பிராணிகளைப் பார்த்துவிட்டு உரிமைக் குரலெடுத்து 'விடுதலை! விடுதலை!' —என்று கர்ஜனை புரிய ஆரம்பித்து விட்டது.

அதுமட்டுமா? "சர்க்கஸ்காரன் நிலையிலிருக்கும் ஏ, ரஷ்யாவே! நீ வாயைத் திற! உனது வாயில் எனது தலையை விட்டு, எங்கள் உரிமைக் கிளர்ச்சி வென்று விட்டது என்பதை உலகுக்கு அறிவிக்கிறேன்!" என்று சொல்வது போல அந்த ஹங்கேரிச் சிங்கம் என்னை வேடிக்கை காட்ட ஆரம்பித்து விட்டது!

—இதை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டது முதலாளித்துவ நாடுகள்!

அமெரிக்க முகாம் மட்டுமல்ல; என்னுடைய கம்யூனிஸ்ட் கூடாரமும் சிதற ஆரம்பித்திருக்கிறது!

பிறைவானம்....

✽ 11-ம் பக்கத் தொடர்ச்சி

'கபீர்' என்றது! அதே சமயம். "சீமான் மருதவாணரே! உங்கள் அன்புத் திருமகனின் மேல் உமக்கு அளவிட முடியா பாசமாமே! அந்தப் பாசத்திற்கு விலை பேசுகிறேன் நான்! உங்கள் தநழ என்னிடம் இருக்கிறான்! இன்றிலிருந்து பத்தாவது தினத்தில் நச்சுமலைக் காட்டில், நாகக் குன்றின் உச்சியில் ரூபாய் ஐயாயிரத்துடன் வந்தால் மகன் கிடைப்பான். வேறு முயற்சி எடுத்தால், அன்றைய தினமே அதே இடத்தில் விலையில்லாமல் எமது மகன் கிடைப்பான்; ஆனால் தலையில்லாமல்! கவனம்-பூபதித் தேவன்"

அப்போது ... அடுப்பங்கரையில் நடுங்கும் கைகளுடன் அக்கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தாள் அஞ்சலை!

"ஐயோ! எங்கே அந்தக் கடிதம்?" என்ற மருதவாணரின் அலறல் எழும்பியது!

அஞ்சலை திடுக்கிட்டாள். அபாயமான நினைவு ஒன்று அவள் நெஞ்சிலே தோன்றியது. மறுகணம் கடிதத்தை அடுப்பிலே கசக்கி எறிந்தாள்!

மருதவாணரின் அலறல்—அஞ்சலையின் பயங்கர முடிவு—இந்தப் பின்னணியோடு அந்த மர்மக் கடிதம் எரிந்து, கருகி, சாம்பலாகி, மறைந்தது!

(அடுத்த இதழில் முடியும்)

ஆனால் ஒன்று! இப்போது எகிப்தில் போராட்டம் நின்றிருப்பதற்கு போரில் எகிப்து சார்பாக நாங்கள் தலையிடுவோம் என்று அறிவித்தோமே, அதுவும் ஒரு காரணம் என்பதை மறந்து விடாதீர்கள்!

'இந்த அறிக்கையை முன்பே வெளியிட்டால் முன்பே போர் நின்றிருக்குமே! எகிப்திற்கு எவ்வளவோ உதவி செய்ததைப் போல் இருக்குமே!' என்று நீங்கள் கேட்கலாம்.

என்ன செய்வது? நான்தான் முன்பே சொன்னேனே! ஹங்கேரிப் பிரச்சினை எனது சிந்தை, அணு ஒவ்வொன்றையும் வேலை செய்யாமல் ஆக்கி விட்டதென்று! அதுதான் காரணம்!

ஆச்சாரியார்

என்ன போங்கள்; நோக்கெல்லாம் இன்னுமா காரணம் புரியல்லே?

இந்த சி. ஆருக்கு என்ன மதிப்பு இருக்கு? இவர் ஏன் ஊசிப் பிரச்சினை, அணுகுண்டுப் பிரச்சினை – இதிலெல்லாம் தலையிட்டிண்டிருக்கார்-என்று கேலிபேசினளே; பார்த்தேளா!

நான் ஒரு வார்த்தை கண்டிக்கிறேன்னு சொன்னேன்! நான் மைலாப்பூரிலே பேசினது அவா காதிலேவிழுந்து உடனே போரை நிறுத்திட்டா. என் வார்த்தைக்கு இங்கே இல்லேன்னாலும் வெளியே மதிப்புதான்னா!

●

பொழுது போக்கு

✽ 2-ம் பக்கத் தொடர்ச்சி

பத்துநாலு நாடுகள் அமெரிக்காவின் போர் நிறுத்தத் தீர்மானத்தை ஆதரித்து ஓட்டளித்துள்ளன. பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ரேல் (குற்றவாளிகள்), ஆஸ்திரேலியா, நியூசிலந்து—ஆகிய ஐந்து நாடுகள் தீர்மானத்தை எதிர்த்தும் ஓட்டளித்திருக்கின்றன. ஆறுநாடுகள் நடுநிலைமை வகித்துள்ளன. ஐ. நா. சபை தன்னுடைய கடமையை உயரிய முறையில் ஒழுங்காகச் செய்து விட்டது.

பிரிட்டிஷ் பார்லிமெண்டில் எதிர்க் கட்சியான தொழிற்கட்சி கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து, கண்டனத் தீர்மானம் தோற்றிருக்கிறது. தொழிற் கட்சியின் இருபெரும் தலைவர்களான கெயிட்ஸ்களும், பெவானும் ஈடனின் பலாத்கார முறையை வன்மையாகக் கண்டித்துப் பேசி, ஈடன் மந்திரி சபையை ராஜிநாமாச் செய்யும்படி கேட்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் நாடெங்கும் கூட்டம் கூடி அதிருப்தி தெரிவித்திருக்கிறார்கள்.

பிரிட்டனின் விபரீதப் போக்கு காமன்வெல்த் நாடுகளை அதனிடம் அவநம்பிக்கை கொள்ளச் செய்து விட்டன. எகிப்து நடவடிக்கையால் ஜனநாயக உலகின் தலைமைப் பதவியைப் பிரிட்டன் இழந்து விட்டது. இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கி ஆட்லி பிரிட்டனுக்கு சம்பாதித்துக் கொடுத்த நல்லெண்ணத்தை, ஈடன் நாசப்படுத்தி விட்டார்.

எகிப்து ஆஸ்பத்திரிகளின் மீதும், படைப் பயிற்சிப் பள்ளியின் மீதும், விமானத் தளங்களின் மீதும் பிரிட்டிஷ், பிரஞ்சு விமானங்கள் குண்டு வீசியுள்ளதாக கைரோ ரேடியோ அறிவிக்கிறது. உரிமைக்காகப் போர்க்கோலம் பூண்டு, கடைசி மனிதன் எகிப்தில் வாழும் வரையில் உரிமைகளைக் காப்போம் என்று சூளுரைத்து நிற்கும் நாசருக்கு திராவிட மக்களின் வாழ்த்தும் வணக்கமும் உரியதாகுக!

எகிப்தின் வெற்றி எழுச்சி பெற்ற மக்களின் வெற்றி! புனர் வாழ்வு பெற்றுவரும் ஆசிய மக்களின் வெற்றி! ஏகாதிபத்யம் எந்த மாடலாக இருந்தாலும்—ஈடன் மாடலானாலும், மாஸ்கோ மாடலானாலும், டாலர் மாடலானாலும்—அதைப் புறக்கணித்து, ஆதிக்கமற்ற பூரண சுதந்திர வாழ்வு பெற விழையும் நம்முடைய வெற்றியும் ஆகும்!

●

விலை

உழைக்காமல் பொருளீட்ட என்னதான் செய்வது என்ற நீண்ட நாள் தீவிர யோசனைக்குப் பின்னர்தான் அவன் அந்த முடிவுக்கு வந்தான். சோதிடம் சொல்லலாமா? மந்திரவாதி என்று சொல்லி மக்களிடையே உலவலாமா? கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்யலாமா? இப்படி எத்தனையோ யோசனைகள்! எல்லாம் பாழ்—கடைசியில்தான் அந்தப் பாழான எண்ணம் அவன் நெஞ்சில் முளையிட்டது!

மறுகணமே அவன் மனக்கண் முன் நகரப் பெரும் சீமான்கள் வரிசை வரிசையாக வந்து போனார்கள்! ஒரே ஒரு பிள்ளையும், அவன்மேல் எல்லையில்லாப் பாசமும், அவர்களில் யாருக்கு இருக்கிறது என்று தேடினான். மாடி வீட்டு மருதவாணர்தான் அவன் கவனத்தில் சிக்கினார்.

அன்றிரவு அவனும், அவனது சகத் தோழர்களும் மருதவாணரின் நெடிய மாளிகையைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

○

"மணி எட்டாவுது! இன்னும் தூங்குகிறானே, இவன்!.. ஏ தம்பீ, தருமு! எழுந்திருடா; பள்ளிக்கூடம் போக வேணுமா?" என்று அன்புடன் கடிந்து கொண்டே தன் அன்பு மகன் தருமலிங்கத்தின் படுக்கை அறையை நோக்கி நடந்தார் மருதவாணர்.

"ஆமாம்....பள்ளிக்கூடம்!... படிச்சு பெரிய வக்கீலாவப் போவுதுல்ல, ஓங்க செல்லப் பிள்ளை! ராத்திரி பூரா தூங்க விடாம கொட்டம் அடிச்சுட்டு, கொரட்டை விடுது குரங்கு, பத்து மணி வரைக்கும்! சனியன்...எங்கேயிருந்து வந்துதோ என் பிராணனை வாங்க..."

அடுப்பங்கரையிலிருந்து தம்பி தர்மலிங்கத்தின்மேல் குற்றப் பத்திரிகை எழுந்தது!

மருதவாணர் முகத்தைச் சுளித்துக் கொண்டார். கேட்டுக் கேட்டு அலுத்துப் போனதுதான் இந்தக் காட்டுக் கூச்சல்! இருந்தாலும், விடியும் போதே 'யுத்த காண்டம்' என்றால் பொறுக்க முடியுமா? "கொஞ்சம் சும்மா இரு அஞ்சலை! அவன்தான் தூங்கினான்னா நீதான் எழுப்பிவிடக் கூடாதா?" என்றார்.

"எழுப்பறதா? அது யாரால் முடியும்? பீரங்கில்ல வைக்கணும்! செல்லம் கொடுத்து, செல்லம் கொடுத்துதான் அது கோபுரத்து மேலேயே குந்திக்கிட்டிருக்கே!"

—இந்தக் குரலும், குரலில் தெளிந்தோடிய கொடூரமும், வெறுப்பும், உங்களுக்கு 'பளிச்' சென்று எடுத்துக் காட்டியிருக்குமே, தருமலிங்கத்தின் சொந்தத் தாயார் அல்ல அஞ்சலை அன்று! வளரும் பருவத்திலேயே குழந்தைகளுக்குக் கிடைக்கும் முதல் எதிரியான சிற்றன்னைதான் அவள். தங்கத் தாயாரைப் பிறந்த தினமே 'விழுங்கி' விட்டானாம். அவனை வளர்க்கவும், தந்தையின் தனிமையைப் போக்கவும் வந்து சேர்ந்த அஞ்சலையோ, அவன் அறியாமல் அவனது எதிரியானாள். அத்துடன் அவளுக்குக் குழந்தையில்லா குறை நெஞ்சில் நெருப்பையே தோற்றுவித்தது. தாயிழந்தவன் என்ற சலுகையால் தருமுக்குக் கிடைத்த சுதந்திரமும், இயற்கையான துடுக்குத்தனமும் அந்த நெருப்புக்கு எண்ணெயை வார்த்தபடியே இருந்தது.

"எழுந்து தொலையேண்டா, கழுதை!" என்று கோபத்துடன் இரைந்து கொண்டே தருமலிங்கத்தின் அறைக்கதவைப் 'படா' ரென்று திறந்தார் மருதவாணர்!

மறுகணம் "ஆ!" என்ற அவரது பெருங்குரல் எழும்பியது! படுக்கையிலே தருமுவைக் காணோம்! சப்தம் கேட்டு ஓடிவந்தாள் அஞ்சலை! படுக்கையைப் பார்த்ததும், 'எங்க போயிருப்பான்? எங்காவது மாங்கா அடிக்கப் போயிருக்கும் மூதேவி!..." என்று வசை பாடினாள்.

மருதவாணர் கண நேரத்தில் மாளிகை முழுதும் அலசிவிட்டார். இருந்தால் அல்லவோ கிடைப்பான்! சோர்ந்துபோன அவரது உள்ளம் அழுகைக்கு ஆயத்தம் செய்யுமுன் அங்கே ஒரு பயங்கரச் சம்பவம் நிகழ்ந்தது!

எங்கிருந்தோ பறந்து வந்ததைப் போல, யாராலோ வீசி எறியப்பட்ட கத்தி ஒன்று அவருக்கு முன்னால் இருந்த மேசையில் 'சதக்' என்று குத்தியது. மருதவாணரின் உடல் வெட வெட என்று நடுங்கியது. அந்தக் கத்தியோடு கட்டப் பட்டிருந்த காகிதம் ஒன்றும் அவருக்குத் தெரிந்தது.

மருதவாணர் நடுங்கிய கைகளால் அந்தக் கத்தியை எடுத்தார்; காகிதத்தை அவிழ்த்தார்; பிரித்தார்; ஆனால் படித்தாரா?

மருதவாணர் ஏக்கச் சக்கமான சூழ்நிலையில் சிக்கிவிட்டார். கையிலிருந்த கடிதத்தையும், எதிரே நின்று கொண்டிருந்த மனைவியையும் மாறி மாறிப் பார்த்தார்.

"என்ன எழுதியிருக்கு அதிலே? சீக்கிரமா படிச்சுதான் சொல்லுங்களேன்!" என்று அவசரப் படுத்தினாள் அஞ்சலை!

மருதவாணரின் கண்களில் நீர் கசிந்தது. அவர் யாரை நொந்து கொள்வது? தவழும் பருவத்திலேயே அவரை ரங்கூனுக்குத் தூக்கிச் சென்றுவிட்ட தாய் தந்தையர்—அங்கு தமிழ் அவசியமில்லை என்றிருந்த நிலைமை—பணமே பிரதானம் என்ற கொள்கையோடு படிப்புக்கு துளி நேரமும் செலவழிக்க முடியாதபடிச் செய்த வியாபார அபிவிருத்தி—இவை அவரது கண்முன் இப்போது நடைபோட்டுக் கேலி செய்தன. அவர் அதற்குக்கூட வருந்தவில்லை; புது மனைவியின் முன் அவர் படிக்கத் தெரியாதவர் என்ற பரம ரகசியம் வெடித்துவிடப் போகிறதே! கடிதத்தைப் பார்த்தார். படிப்பதைப்போல நடித்தார்.

"அடடா! என்ன இருக்கு அதிலே? கொடுங்க, நானாவது படிக்கிறேன்!" என்று இரைந்தாள் அஞ்சலை!

'அ'—'இ' போன்ற ஒரு சில எழுத்துக்களைத்தான் அவரது கண்கள் தெரிந்துகொள்ள முடிந்தது. அஞ்சலை மீண்டும் அவசரப்படுத்தினாள்.

"ஏன் இப்படிக் கத்துறே? இதிலே ஒண்ணுமில்லே! சும்மா நம்ப தருமுப்பய வெளையாட்டுக்கு..." என்று ஏதோ மழுப்பினார்.

அஞ்சலையை அடக்கி விட்டோம் என்றுதான் அவர் நினைத்தார். ஆனால்......விளையாட்டா? விளையாட்டிலே கத்தி ஏன்? கடிதம் ஏன்?... இந்தக் குழப்பம் அஞ்சலையின் உள்ளத்தில்! குழப்பம் சந்தேகமாகவும் மாறிவிட்டது! கடிதத்தில் இருக்கும் செய்தியை அறிய அவள் துடித்தாள்.

மருதவாணரும் அதே நிலையில்தான் தவித்தார். கடிதத்தைப் பத்திரமாக மடித்து எடுத்துக்கொண்டு தன் அறைக்குள் சென்றார். மெத்தைக்கு அடியிலே திணித்தார். கடிதம் அஞ்சலையின் கையில் கிடைத்துவிட்டால், தன் பலவீனம் தெரிந்துவிடுமல்லவா? சற்று நேரம் சென்றதும் கடிதத்தை யாரிடமாவது எடுத்துக் கொண்டு ஓடி, படிக்கச் சொல்லலாம் என்பது அவரது எண்ணம்.

தடுமாறித் தவித்துக் கொண்டிருந்த உள்ளத்தையும், உள்ளத்திலே கொதித்துக் குமுறிக் கொண்டிருந்த வேதனையையும், திரை போட்டு மறைத்துவிட்டோம் என்ற தவறான நினைப்பில், எதனாலும் ஒரு சிறிதும் பாதிக்கப்படாதவர் போல் தன் அறையை விட்டு வெளியே வந்தார்.

திடுக்கிடும் அசாதாரணமான ஏதோ ஒரு செய்தியைத்தான் அக்கடிதம் கொண்டிருக்க வேண்டும்; அதை எப்படியும் அறிந்துவிட வேண்டும்!—என்ற சிந்தனையோடு அடுப்பங்கரைக்குப் போய் விட்டாள் அஞ்சலை!

இவை அனைத்தையும் தாண்டி அவர்கள் இருவரின் உள்ளத்திலும் அப்போது எழும்பி நின்ற ஒரே கேள்வி—"தருமலிங்கம் எங்கே?"

மாளிகை வாசலிலே வந்து நின்று கொண்டிருந்தார் மருதவாணர். தெரு வழியே சென்று கொண்டிருந்த அவரது நண்பர் ஒருவர் பேச வந்தார். வந்தவர் வேலையற்றவர். நேரத்தின் மதிப்பு தெரியாதவர். மருதவாணரின் வேதனை உணராது, நீண்ட நேரம் தேவையற்ற அயல் நாட்டான் முதல், அண்டை வீட்டான்வரை பேசி விட்டுப் புறப்பட்டார். மருதவாணர், கடிதத்தை அவரை விட்டுப் படிக்கச் சொல்லலாம் என்ற முடிவுடன், "கொஞ்சம் இருங்கள்" என்று சொல்லிவிட்டு உள்ளே ஓடினார். தன் அறையை அடைந்தார். மெத்தையைப் புரட்டினார். ஆனால்...? அவர் வைத்த அந்தக் கடிதம் அங்கு இல்லை! அவருக்குக்

❋ தொடர்ச்சி 10-ம் பக்கம்

எம். ஆர். வேங்கட்ராமன்; அமைந்தகரை.

(?) தூக்கத்திற்கும் மரணத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

இந்த அடக்கு முறை ஆட்சியில் அன்றாட வாழ்க்கையில் இரண்டுமே நடைபெறுகிறது, நண்பரே!

(?) மூன்றாம் உலகயுத்தம் வந்தால் நமது கடவுளர்கள் என்ன செய்வர்?

கடலிலே சப்மரீன்கள் நடமாட்டமிருக்கும்; தரையிலே அணுகுண்டுகள் வெடிக்கும்; ஆகாயத்தில் ராக்கெட் சாதனங்கள் இருக்கும். கடவுளர்க்கு இருக்க இடமிருக்காது. பாவம்; அவர்களுக்காகவாவது மூன்றாவது உலக யுத்தம் ஏற்படாமல் தடுக்கப்பட்டாக வேண்டும் போலிருக்கிறதே!

வளையாபதி; புலியூர்.

(?) தென்னக வீட்டின் திறவுகோல் யாரிடமிருக்கிறது?

நம்மவர்களிடம்தான்; அவர்கள்தான் இன்னும் அதை உபயோகிக்கும் சக்தியற்று இருக்கிறார்கள்!

(?) இலவு காத்த கிளி யார்?

இந்தியாவிற்கு ஆச்சாரியார்; அகில உலகிற்கும் ஆண்டனி ஈடன்!

கோதண்டபாணி; நீடாமங்கலம்

(?) தேர்தலில் தோற்றுவிட்டால் நீங்கள் அனைவரும் தற்கொலை செய்து கொள்வீர்களா?

அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சி தோற்றுவிட்டதால் அவர்கள் அனைவரும் தற்கொலையா செய்து கொண்டனர்? தேர்தல் களம் வெற்றி அல்லது சாவு—என்பதை நிர்ணயிக்கும் புறநானூற்றுப் போர்க்களம் அல்ல, தோழரே!

கந்தன்; கீழ்ப்பாக்கம்.

(?) ராமர், கிருஷ்ணர் போன்ற தெய்வங்களுக்கும் — காளி, காட்டேறி போன்ற கடவுள்களுக்கும் வேறுபாடு என்ன?

முன்னவை பார்ப்பனரின் வயிற்றுப் பிழைப்புக்கும், பின்னவை பார்ப்பனரல்லாதார் பிழைப்புக்கும் ஏற்படுத்தப்பட்டவை. மொத்தத்தில் இரு ரகமும் மக்களை சுரண்டும் கருவிகள்தான்!

இலட்சிய நடிகர்
ராஜேந்திரன்
நாடக நிகழ்ச்சிகள்!

9-11-56: கள்ளக்குறிச்சியில்: மணிமகுடம்.
10-11-56: கள்ளக்குறிச்சியில்: மு. கருணாநிதி தலைமையில்: புதுவெள்ளம்.
11-11-56: திருவண்ணாமலை—மணிமகுடம்.
12-11-56: திருவண்ணாமலை—புதுவெள்ளம்.
17-11-56: மதுரை-புதுவெள்ளம்
18-11-56: திருநெல்வேலி—மணிமகுடம்.
19-11-56: திருநெல்வேலி—புதுவெள்ளம்.

விரைவில்
நூல் வடிவில் கிடைக்கும்!
மு. க. வின்
வெள்ளிக்கிழமை
'முரசொலி'யில் நீங்கள் படித்து மகிழ்ந்த உணர்ச்சிக் காவியம்!
விபரங்கட்கு
திராவிடப் பண்ணை
தெப்பக்குளம் : : திருச்சி


அறிஞர் அண்ணாவின்
ரங்கோன் ராதா
தயாரிப்பு: மேகலா பிக்சர்ஸ்
சென்னை:
பிரபாத்-பாரகன்-சரஸ்வதி
அரோரா மற்றும் தென்னகமெங்கும்
வசனம்: மு.கருணாநிதி
டைரக்ஷன்: A.காசிலிங்கம்
நேஷனல் பிக்சர்ஸ்

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-123, மவுண்ட் ரோடு சென்னை-6.